Registered as a news paper.

பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

புல்மைப்பரிசில் திட்டம் 2004 ற்கான விண்ணப்ப முடிவு திகதி அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க **30.11.2003** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடா நாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 25 (20.11.2003) வியாழக்கிழமை இதழ் :51

## மாவீரர் நாளை அனுஷ்டிக்க தயாராகுமாறு அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் தாயக விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம்செய்த மாவீரர்களின் நினைவாக நடைபெறும் மாவீரர் நாளுக்கு தயாராகுமாறு, யாழ். மாவட்ட மாவீரர் எழுச்சி நாள் ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

மாவீரர் எழுச்சிநாள் தொடர்பாக வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே குடாநாட்டு மக்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

குடாநாட்டில் உள்ள மக்கள் அனைவரும் தங்கள் வீடுகள், வீதிகள், பொது இடங்களை சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரித்தும், நினைவுப் பந்தல்கள் அமைத்தும் எழுச்சிப் பாடல்களை ஒலிக்க வைத்தும் மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கத் தயாராகுங்கள்.

ஒவ்வொரு (10 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாள் அலங்கரிப்புக்கு மீசாலையில் படையினர் தடை!

(சாவகச்சேரி)

மாவீரர் நாளை முன்னிட்டு வீதிகளில் அலங்கார வளைவுகளை அமைத்து அலங்கரிப்பதற்கு மீசாலையில் படையினர் தடைவிதித்தனர்.

நேற்றிரவு 8.00 மணியளவில் மீசாலை ஐயா கடையடியில் மாவீரர்களின் நினைவாக வீதி வளைவுகளை அமைத்து சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கும் நடவடிக்கையில் அந்தப் பகுதி மக்கள் ஈடுபட்டனர்.

அதன்போது, அந்தப் பகுதிக்குச் சென்ற படையினர் வீதிவளைவுகள் அமைப்பதற்கு தடைவிதித்ததுடன் அந்தப் பகுதியில் நடப்பட்டிருந்த வளைவுகளை அகற்றியும் நடப்பட்ட கம்பங்களைப் பிடுங்கி எறிந்ததுடன் அலங்கரிப்பதற்கு படையினர் மக்களைத் தடுத்தனர்.

இதனால் படையினருக்கும் மக்களுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டது.

மாவீரர் நாளுக்கான அலங்கார வேலைகளை நிறுத்துமாறும் (10 ஆம் பக்கம் பார்க்க)



வரவு - செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றும் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி.

# அரச ஊழியர், ஓய்வூதியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க அரசு திட்டம்!

## வரவு - செலவுத் திட்டத்தில் நிதியமைச்சர் முன்மொழிவு

(கொழும்பு)

**அரசாங்க திணைக்கள, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 1250 ரூபா அல்லது சம்பளத்தில் 10 வீத சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கும் ஓய்வூதியர்களுக்கு 10 வீத சம்பள உயர்வு வழங்கவும் விவசாயிகளுக்கான உரமானியத்தை அதிகரிப்பதற்கும் நிதியமைச்சர் கே.என். சொக்ஸி நேற்று சமர்ப்பித்த அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்குக் கூடுதல் நன்மைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நேற்றுப் பிற்பகல் 2.34 மணியளவில் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸியால் முன்வைக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டுக்கான புதிய வரவு - செலவுத் திட்டத்தின்படி, கடந்த ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணியால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திலும் பார்க்க அதிக நன்மைகளை அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியக்காரர்கள் பெறவுள்ளனர்.

அரச ஊழியர், ஓய்வூதியம் பெறுவோருக்கு 10 வீத சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, (10 ஆம் பக்கம் பார்க்க)

## மிலிந்த இன்று ஜப்பான் பயணம்!

(கொழும்பு)

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்து ஜப்பானிய அரசாங்கத்திற்கு விளக்கிக் கூறுவதற்காக, அமைச்சர் மிலிந்த மொறகொட இன்று ரோக்கியோவுக்குச் செல்லவுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)


## பேச்சிலிருந்து நோர்வே விலகியது ஒரு தந்திரோபாய நடவடிக்கையே!

## நாடாளுமன்றை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை!

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா

# பேச்சிலிருந்து நோர்வே விலகியது ஒரு தந்திரோபாய நடவடிக்கையே!

## இந்திய வெளியுறவுச் செயலர் கன்வல் சிபால்



(புதுடெல்கி)

இலங்கை இனப்பிரச்சினை தீர்வின் அனுசரணையாளர் நிலையிலிருந்து நோர்வே தற்காலிகமாக பின்வாங்கியது ஒரு தந்திரோபாய நடவடிக்கையே என, இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளரான கன்வல் சிபால் தெரிவித்தார்.

தென்னிந்திய நகரான பெங்களூரில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே சிபால் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவா அல்லது ரணில் விக்கிரமசிங்கவா கட்டுப்படுத்துகின்றார்கள் என்பதை அறிய நோர்வே விரும்பியது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சியிலிருந்து நோர்வே முற்றுமுழுதாக விலகிவிடவில்லை!

## புதுடெல்கியில் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(புதுடெல்கி)

இலங்கையின் சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே அரசாங்கம் விலகிக்கொண்டதாகக் கூறப்படுவதை, தற்போது இந்தியாவில் தங்கியிருக்கும் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நிராகரித்திருக்கிறார்.

இதுகுறித்து செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சொல்ஹெய்ம், நாம் எமது தலையீட்டை நிறுத்திவைத்திருக்கிறோம். ஆனால் அனைத்துத் தரப்பினருடனும் நெருங்கிய தொடர்புகளைத் தொடர்ந்து பேணிவருகின்றோம்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தொடர்ந்தும் அங்கு நிலைமை கட்டுமீறிச் செல்வதைத் தடுக்கும் நோக்கில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை!

## சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா

நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கான அனைத்து அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு அரசியல் அமைப்பில் வழங்கப்படவில்லை. ஒத்திவைப்பதற்கான அனுமதியை நாடாளுமன்றத்தில் பெறவேண்டும் என நாடாளுமன்ற சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு நாடாளுமன்ற அவையை தொடக்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது - கடந்த மூன்றாம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்ற அமர்வை இருவாரங்களுக்கு காரணமின்றி ஒத்திவைத்தார்.

அரசியல் அமைப்பின் 70 ஆவது சரத்தின்படி நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பதாக இருந்தால் நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறவேண்டும். ஜனாதிபதி இதனை விடுத்து எந்த அறிவிப்பும் இன்றி நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தமையானது (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் செயற்பாட்டை விமர்சித்த

# சபாநாயகர் மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

(கொழும்பு)

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

நேற்றுக் காலை நாடாளுமன்றம் கூடிய போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தை ஒத்திவைத்த செயல் குறித்து சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கடுமையாக விமர்சித்திருந்தார்.

ஜனாதிபதியின் செயல் ஜனநாயக விரோதமானது என அவர் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# இலங்கையில் பெண்கள் அபிவிருத்திக்கு குறைந்தளவு நிதியே ஒதுக்கப்படுகின்றது

## மகளிர் விவகார அமைச்சின் ஆய்வு அறிக்கை தெரிவிப்பு

இலங்கையில் பெண்கள் அபிவிருத்திக்கு 0.2 வீதமான நிதியே ஒதுக்கப்படுகின்றது என, மகளிர் விவகார அமைச்சின் ஆய்வு அறிக்கைகள் மூலம் தெரியவருகின்றது.

நேற்றைய தினம் நல்லாட்சியும், வரவு - செலவில் பால் நிலை வேறுபாடு பற்றிய ஆய்வுப்பட்டறையில் உரையாற்றிய மகளிர் அபிவிருத்தி பணிப்பாளரான நிமால்கா பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பெண்களின் நிலையை உயர்த்த வேண்டும் அதற்காகவே, நாம் செயற்படுகின்றோம். முக்கியமாக போரில் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளவர்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வரவேண்டும். எமது சமூகம் ஆண்களை விட பெண் வாழ்க்கை நிலையினை வேறுபாடாக நோக்குகின்றது. இவ் ஆண், பெண் பால் நிலையினைப் போக்கி சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஆண், பெண் பால் நிலை தொடர்பாக எமது சமூகத்திலும் சரி, அரசியலிலும் சரி செயற்பாடுகள் மாறுபட்டவையாகவே காணப்படுகின்றது. நாம் எமது செயற்பாடுகளை தமிழ் மொழி மாவட்டங்களான வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் விரிவுபடுத்தி உள்ள போதிலும், அரசாங்கத்தின் நிதி போதாதுள்ளது.

எமக்கு ஐக்கிய நாடுகள் சாசனத்தின் மூலமாகவும், வெளிநாட்டு நிறுவனங்கள் மூலமாகவும் உதவி கிடைக்கின்றது. இதனூடாகவும் ஓரளவு தேவைகளையும் எமது செயற்பாடுகளையும் முன்னெடுக்கக் கூடியதாகவுள்ளது.

இவற்றை விட, வெளிநாடுகளில் மகளிர் அபிவிருத்திக்காக வரவு செலவுத்திட்டத்தில் 2 வீதத்திற்கு மேலாக ஒதுக்குகின்றபோது, எமது நாட்டில் 0.2 வீதமே மகளிர் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுகின்றது. இங்குள்ள பெண்களின் அன்றாடப் பிரச்சனைகளை அறிந்து நடவடிக்கை எடுக்கமுடியும். இதனால், தேசியரீதியிலான திட்டங்களை உருவாக்க வழிவகுப்பதற்காகவே, இவ்வாறு ஆய்வு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

# 14 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் 'நாய்த் திருநாட்டின் மீது சத்தியப்பிரமாணம்'

(கொழும்பு)

பதின்நான்காவது தேசிய விளையாட்டு விழாவில் தமிழ் மொழி அவமதிக்கப்பட்டுள்ளது.

தேசியவிளையாட்டு விழா அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த நானூறுக்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர்.

இந்தப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கு, சிங்கள மொழியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாக மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை, தேசிய விளையாட்டு விழாவில் வெளியிடப்பட்ட சத்தியப் பிரமாணத்தில் "எமது தாய்த் திருநாட்டின் கௌரவத்திற்காகவும்" என குறிப்பிடுவதற்குப் பதிலாக "எமது நாய்த் திருநாட்டின் கௌரவத்திற்காகவும்" என குறிப்பிடப்பட்டுள்ளதானது தமிழ் மக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**சத்தியப்பிரமாணம்**

2003 நாடத்தப்படவுள்ள XXix வது மாபெரும்
தேசிய விளையாட்டு விழாவில்
எமது நாய்த் திருநாட்டின் கௌரவத்திற்காகவும்,
விளையாட்டின் அழியாப்பெருமைக்காகவும்,
அதன் சட்டத்தடங்களுக்கு அமைவாக,
விளையாட்டு வீரனுரிய உண்மையான உணர்வுடன்
பங்குகொள்ள நாம் உறும் உறுதி கூறுகின்றோம்

# நிறுத்திய மோட்டார் சைக்கிள்களை பொலிஸார் எடுத்துச் சென்றனர்!

### தடைசெய்யப்பட்ட இடங்களில்

யாழ்போதனா வைத்தியசாலைக்கு முன்பாக வாகனங்கள் நிறுத்த தடை செய்யப்பட்டிருந்த இடத்தில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களை யாழ்.பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் எடுத்துச்சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. வைத்தியசாலைக்கு முன்பாக வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனையும் மீறி சிலர் வாகனங்களை நிறுத்துவதால் வைத்தியசாலைப், பணிகளுக்கு இடையூறுகள் ஏற்படுகின்றது.

இது தொடர்பாக உரிய அறிவித்தல் பலகைகளும் போடப்பட்டுள்ளன. வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்களும் இது தொடர்பாக எடுத்துக்கூறியும், அதனையும் பொருட்படுத்தாது சிலர் வாகனங்களை இவ்வாறு நிறுத்திவருகின்றனர்.

இவ்வாறு நிறுத்தப்பட்ட வாகனங்கள் ஒருவாரத்திற்கு முன்னரும் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் காயமடைந்த இளைஞன் மரணம்

காரைநகர் அல்லன் வீதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் உழவு இயந்திர விபத்தில் சிக்கி அறிவிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று மரணமானார்.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை தபோதரன் (வயது 18) என்பவரே மரணமானார். இதேவேளை, இவ்விபத்துடன் தொடர்புடைய உழவு இயந்திர சாரதி தற்போது பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கபபடுகிறது. (111)

# வானில் வந்தவர்கள் சுட்டதில் ஒருவர் பலி, மூவர் காயம்

ஹம்பகா மாவட்டத்தில் உள்ள உடகம்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார், மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் வான் ஒன்றில் வந்த துப்பாக்கிதாரிகள் உடுகம்பொல பாடசாலைக்கு முன்பாக வைத்து ஒருவரைச் சுட்டுக் கொன்றதுடன், மூவரைக் காயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைப் புரிந்தவர்கள் பாதாள உலகக்கும்பலைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டுமென, ஹம்பகா மாவட்டப் பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# தேசிய கல்வியியற் கல்லூரியில் முதற் தடவையாக பட்ட நிறைவு விழா

மூன்று வருடக் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாப் பாடநெறியை நிறைவு செய்த உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களுக்கு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பட்ட நிறைவு வைபவம் நடைபெறவுள்ளது.

தேசிய கல்வியற்கல்லூரி பீடாதிபதி கலாநிதி.தி.கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸும், சிறப்பு விருந்தினராக வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் எஸ். சேதுராசாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளும் உள்ளகப்பயிற்சியை நிறைவு செய்யும் சகல உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் எதிர்வரும் சனி காலை 9.00 மணிக்கு வருகை தருமாறு நிகழ்ச்சி இணைப்பாளர் மா. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

# மிதிவெடி வெடித்ததில் பணியாளர் காயம்

(சுன்னாகம்)

வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் மிதிவெடி வெடித்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சுன்னாகம் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயமே மேற்படி வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. ஹலோ ட்ரஸ்ட் மிதிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த எஸ். ரமேசன்(வயது 28) என்னும் நபரே வெடி விபத்தில் காயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது. இந்த இளைஞன் கால்கள், கைகள், தாடைப்பகுதிகளில் பலமாக காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகிறார்.(ஜெ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பப் பெண் மரணம்

(சுன்னாகம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி காயமடைந்திருந்த குடும்பப் பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்த விபத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த தேவமலர் செல்வரட்ணம் (வயது 65) என்பவரே விபத்தில் காயமடைந்து, நேற்றுமுன்தினம் மரணமடைந்தார்.

இவரும், இவருடைய மகளும் யாழ். தண்ணீர்த் தாங்கியடிச் சந்தியில் வந்து கொண்டிருந்த சமயமே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.


இச்சம்பவத்தில் தேவமலரின் மகள் தலையில் தலைக்கவசம் அணிந்திருந்தமையால் காயங்கள் இன்றி தப்பியுள்ளார். தாயின் தலையில் பலத்த காயம் என்பதினால் சிகிச்சை பலனளிக்காத நிலையில் இவர் மரணமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அரியாலை பகுதியில் தொடரும் சட்டவிரோத மண் அகழ்வு!

அரியாலை மணியந்தோட்டப் பகுதியில் சட்டவிரோதமாக தொடர்ந்தும் மண் அகழ்ந்தெடுக்கப்பட்டு, உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்லப்படுகிறது.

மேற்படி பகுதியில் அதிகாலை வேளையும், நள்ளிரவுவேளையும் உழவு இயந்திரங்களின் மூலம் மண் கொண்டுசெல்லப்படுவதோடு, மழை நேரங்களில் மிக அதிகமாக மண் அகழப்படுகிறது.

சட்டவிரோதமாக மண் அகழப்படுவதை தடுப்பதற்காக, உரியவர்கள் அவ்வப்போது நடவடிக்கை எடுத்தாலும்கூட, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு மேற்படி சம்பவங்கள் தொடர்கிறது. (55)



தொண்டமனாறு - செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு புதிய சித்திரத் தேர் அமைப்பதற்கான ஆரம்ப வைபவத்தின்போது பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் எடுக்கப்பட்ட படங்கள்.


**சிறுவிளம்பரம்**

**தேவை**

யாழ். வணிகர் கழகத்திற்கு ஆண் அலுவலக உதவியாளர் (peon) ஒருவர் தேவை. 26.11.2003 ற்கு முன் தகுதியானவர் யாழ். வணிகர் கழகம், இல.165, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (சி/1816)

**JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION**

**GRADUATION CEREMONY - 2003**

for the 2nd Batch Students.

**Time: On Sunday 23.11.2003 at 2.00 p.m.**

**Venue: Jaffna National College of Education.**

**Chief Guest: Prof.S.Mohanathas**
**Vice Chancellor, University of Jaffna.**

*All are welcome*

Dr.T.Kamalanathan.
President.

Mr.N.M.Pirapakaran.
Co-ordinator, G.C
(சி/1815)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல்
ராஜேஸ், ஸ்ருதிகா நடித்த
**ஆல்பம்**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
**DOUBLE JEODARDY**
(சி-1752)

**ராஜா** யாழ்ப்பாணம்.

விக்ரம், சூர்யா, லைலா நடித்த
**பிதாமகன்**
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
24ம் திகதி முதல் அஜித், மீரா ஜஸ்மின் நடித்த
**ஆஞ்சநேயா**
(சி-1751)

நூலகம் மாநகராட்சி மன்றம்

# வெளிநாடுகளிலும் மாவீரர்தின நிகழ்வு பெருமெடுப்பில் நடத்துவதற்கு ஏற்பாடு

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கின் தமிழர் தாயகப் பகுதியில் நாளை முதல் 27 ஆம் திகதிவரை மாவீரர் தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அதேவேளை- வெளிநாடுகளில் தமிழர்கள் வாழும் இடங்களிலும் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

லண்டன் எக்ஸல் மண்டபத்தில், எதிர்வரும் 27 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

தமிழினத்தின் சுதந்திரமான நல்வாழ்வுக்காக தம்மை ஈகம் செய்த மாவீரர்களின் நிழற்படங்களை மலர் வணக்கத்திற்காக வைக்கவிரும்பும் உறவினர்கள் ஈழம் இல்லத்துடன் தொடர்புகொண்டு நிழற்படங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. அத்துடன், நிகழ்வு நடைபெறும் இடத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குழந்தைகளுடன் தாய்மார் இளைப்பாறுவதற்கு - தனியான அறை, சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள், அவர்களுக்கான உணவு வகைகள், குழந்தைகள் பெண்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதற்கான தனியான பகுதி என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நெதர்லாந்தில் மறெஸ்கா மண்டபத்தில் டிசம்பர் 6 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. தேசியக் கொடியேற்றல், மாவீரர் வணக்கம், எழுச்சி இசை, எழுச்சி நடனங்கள், சிறுவர் உரைகள், கவியரங்கம், சிறப்புரைகள் எனபன இடம்பெறவுள்ளன.

# பாகிஸ்தானியர்களை நாடு கடத்த வெளிநாட்டு விமானிகள் மறுப்பு

இலங்கையில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த 130 பாக்கிஸ்தானியர்களையும், அவர்களது சொந்தநாட்டிற்குக் கொண்டுசென்றுவிட, வெளிநாட்டு விமானிகள் மறுத்துள்ளனர்.

சட்டவிரோதமாக உள்ள ஒரு தொகுதி பாகிஸ்தானியர்களை, நேற்றுமுன்தினம் அவர்களது சொந்த நாட்டிற்கு அனுப்புவதாக இருந்தது. விமானிகள் மறுத்த காரணத்தால், இவர்களை அனுப்பமுடியவில்லை உள்நாட்டு அதிகாரிகள் இது தொடர்பாகத் தம்மீது எந்த சட்ட நடவடிக்கைகளும் எடுக்கமாட்டார்கள். ஆனால், சரவதேச சட்டத்தின்படி சட்டவிரோதமானமுறையில் யாரையாவது கொண்டுசென்றால், தாம்- அந்தநாட்டு அரசினால் விலங்கிடப்பட்டு, சிறையில் அடைக்கப்படுவோமெனத் தெரிவிததனர்.

இவ்வாறு இவர்களைக் கொண்டு செல்வதாக இருந்தால், இரண்டு உள்ளூர் அதிகாரிகளும் அவர்களுடன் வரவேண்டுமென விமானிகள் தெரிவித்தனர்.

# தமிழ்மக்கள் இனவாதம் பேசியவர்களல்லர்; அவர்கள் முற்போக்கு சிந்தையுடையவர்கள்!

## நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்கள் என்றும் முற்போக்கு சிந்தனையுடையவர்களாகவே இருந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக அவர்கள் கிளர்ந்தெழவேண்டியது காலத்தின் கட்டாயமாக்கப்பட்டது என, விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக ஊழியா தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

தமிழ்மக்கள் என்றுமே இனவாதம் பேசியவர்கள் அல்லர். அவர்கள் முற்போக்கு சிந்தனை மிக்கவர்களாகவே இருந்துவருகிறார்கள். இன, மொழி, மதம் என்பவற்றில் மக்களை பிரித்துப் பார்க்கும் கீழ்த்தரமான நிலைக்கு அவர்கள் என்றுமே சென்றதில்லை.

இதனை- அண்மையில் எம்மால் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்ட இடைக்கால திட்டவரைபும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. நாம் எம் இனத்தையோ, மதத்தையோ முன்னிலைப்படுத்தி எமது வரைபை முன்வைக்கவில்லை. தமிழ்மக்கள் இவ்வளவு நாளும் அனுபவித்த துயரங்கள், துன்பங்கள் நீங்கவேண்டும். அவர்கள்து உரிமைகளும் மதிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்திலேயே, நாம் இடைக்கால திட்டவரைபை தயாரித்துள்ளோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

என்றுமே தமிழ்மக்களுடைய நலன்களைப் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகளையே எமது தலைவர் முன்னெடுப்பார். எமது போராட்டம் எந்த குழப்பங்களோ, பதற்றங்களோ இல்லாது முன்னேறியது. இதற்குக் காரணம் தமிழ்மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக கைகோர்த்து நிற்பதேயாகும்.

யாழ்.பல்கலைக்கழக சமூகம் எமது விடுதலைப் போராட்டத்திற்கு அளப்பரிய பங்கினை ஆற்றியிருக்கிறது. அண்மையில்கூட, பொங்கு தமிழ் நிகழ்வினூடாக எமது அபிலாஷைகளை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச்சொல்லும் பாரிய பொறுப்பை யாழ்.பல்கலைக்கழகம் செய்தது. அதில், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினுடைய பங்கும் அளப்பரியது. அதற்காக நான் அவர்களை பாராட்டுகிறேன். சில பொறுப்புக்களும், அதிகாரங்களும் தவிர்க்கப்படல் வேண்டும். நாம் அனைவரும் ஒன்றாக அணிதிரண்டு உறுதியாக நிற்போம். இந்த மண்ணிலே எங்களுக்கும் உரிமையிருக்கிறது. இது எங்களுடைய பூமி. அதிலே சுதந்திரமாக வாழ நாம் ஆசைப்படுகிறோம்.

எனவே, விடுதலைப் போராட்டத்திற்கு ஊழியர் சங்கம் ஆற்றிய பங்களிப்பை தொடர்ந்தும் ஆற்றவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.(ச)

### வெட்டுப்புள்ளிகள் அடுத்தமாதம் வெளியிடப்படும்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் அடுத்தமாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உபதலைவர், பேராசிரியர் எல்.எல்.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

அனுமதிக்கு 35 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

### நாடக விழா

(யாழ்ப்பாணம்)

இளவாலை திருமறைக்கலாமன்றம் நடாத்தும் நாடகவிழா - நாளை மாலை இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலயத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக தெல்லிப்பளை பிரதேச செயலர் க.குணராசாவும், சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ சங்க பொது முகாமையாளர் சு.வைரவநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வடக்கு-கிழக்கு புனரமைப்பு பணிக்கு ஜேர்மன் அரசு 260 மில்லியன் உதவி

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளை மீள்கட்டுமானம் செய்வதற்கு, ஜேர்மன் அரசு 2.4 மில்லியன் யூரோவினை மேலதிகமாக வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிதி நிகொட் நிறுவனத்தின்மூலம், இந்த வருட டிசம்பர் மாதத்திலிருந்து எதிர்வரும் 2006 ஆம் ஆண்டுக்கான மூன்று வருடங்களுக்கு வழங்கப்படுமெனவும், மனித தேவைகளுக்கான உபகரணங்கள், தேவையான பொருட்கள் என்பவற்றை வழங்குவதுடன், அதன் உதவித்திட்டங்களுக்கும் இந்த நிதி பயன்படுமென நிகொட் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் இலங்காநேசன் தெரிவித்தார்.

ஜேர்மனின் பொருளாதார, ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான அமைச்சு - இலங்கை அரசின் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே, வடக்கு- கிழக்கை புனர்நிர்மாணம் செய்ய, நிதியுதவியை நிகொட் மூலம் வழங்குவதென முடிவெடுக்கப்பட்டதாக, ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுத்தாபன பணிப்பாளர் கலாநிதி றொனால்ட் ஸருவர் தெரிவித்தார்.

# மாகாணசபை வெற்றிடங்கள் பட்டதாரிகள்மூலம் நிரப்பப்படும்

மாகாணசபையிலுள்ள வெற்றிடங்களுக்கு, வேலையற்ற பட்டதாரிகளை நியமிப்பதென்று முதலமைச்சர்கள் - ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

மத்திய அரசாங்கம் நிதியை ஒதுக்கீடு செய்தாலும், செய்யாவிட்டாலும் - டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக 1350 ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

ஜனாதிபதியின் பிரதிநிதிகள் குழுவுக்கும், முதலமைச்சர்களுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வேலையற்ற பட்டதாரிகள் பிரச்சினைக்கு வழிகாணும் முகமாக, இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஏனைய வெற்றிடங்களுக்கான நேர்காணல்கள் - பெப்ரவரி மாத முடிவுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும்.

இந்தப் பேச்சுவார்த்தைகளை அடுத்து, சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த வேலையற்ற பட்டதாரிகள்- தமது நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பிரதமர் - புலிகள் இடையிலான உடன்படிக்கை சட்டரீதியற்றதாம்!

## சரத் அமுனுகம தெரிவிப்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைத் தவிர்த்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்டுள்ள போர் நிறுத்த உடன்பாடானது, சட்டரீதியற்றதாகும். இருந்தபோதும், நாட்டு மக்களின் நலன்கருதி ஜனாதிபதி அதற்கு எவ்வித எதிர்ப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையெனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேசசாளரான கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பதற்காக, கொழும்பில் நேற்றுமுன்தினம் அவரால் நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடாளுமன்றில் அதிகப்படியான ஆசனங்களைக் கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- சமாதான முன்னெடுப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும். பாதுகாப்பு அமைச்சை - ஜனாதிபதி பொறுப்பேற்றமையால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியைத் தவிர்க்க, பாதுகாப்பு உயர்சபை ஒன்று அமைக்கப்படவேண்டுமென ஜனாதிபதி பரிந்துரை செய்திருப்பதாகவும், இந்த பாதுகாப்பு சபையில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட பாதுகாப்பு உயரதிகாரிகள் அங்கம் வகிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் தொடர்பில், ஜனாதிபதி இறுதிக் கையொப்பம் எதையும் இடவில்லை. அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. ஊடகங்கள் இந்த விடயத்தை வெளியிட்டபோதும், அவசரகாலநிலை பிரகடனம் தொடர்பில்- உலகம் முழுவதும் செய்தி வெளியானபோதும், ஜனாதிபதி செயலகம் மூன்று நாட்கள்வரை மௌனம் சாதித்மை தவிர்க்கமுடியாத தவறு என்பதையும் சரத் அமுனுகம ஏற்றுக கொண்டார்.



மக்கள் விடுதலை முன்னணிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் கொள்கையளவில் இணக்கம் ஏற்பட்டுள்ளதெனத் தெரிவித்த அவர் - இதனடிப்படையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதெனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில், வற்வரியினைக் குறைக்கவேண்டுமெனவும், கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டுமெனவும் பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் தற்போது சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளமையால்- அரசியல்வாதிகளின் தலையீடுகளுக்கு இடமளிக்காது, பொலிஸார் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென, ஜனாதிபதி அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அமுனுகம மேலும் தெரிவித்தார்.(01)

# நாட்டில் அரசியல் நெருக்கடியான நேரத்தில் பேச்சிலிருந்து நோர்வே விலகியிருக்ககூடாது

## தேசிய சங்க சபா தெரிவிப்பு

நாட்டில் தற்போதைய அரசியல் நெருக்கடியான நிலையில், சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே அரசு பின்வாங்கியமையானது, ஏற்றுக் கொள்ளக்கூடியதல்லதென தேசிய சங்க சபா சார்பில் வண. அநுரலி ரத்ன தேரோ - வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே தற்காலிகமாக விலகியமையானது, அதன்பொறுப்பற்ற தன்மையையே காட்டுகிறது. அத்துடன், விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இன்றுவரை, நோர்வே நாட்டு மத்தியஸ்தர்கள் - விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வந்தனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் மூவாயிரம் தடவைகளுக்கு மேல் மீறியுள்ளனர். அத்துடன், தற்போதும் அவர்கள் சிறுவர்களைக் கடத்தி, படையில் சேர்க்கின்றார்கள். இந்தநிலையிலேயே, நோர்வே சமாதான முயற்சிகளிலிருந்து பின்வாங்கியுள்ளது.

எனவே - சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே பின்வாங்கியமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. எதிர்காலத்தில், எப்படிப்பட்ட பேச்சுக்கள் நடந்தாலும், நோர்வே அரசு மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டுமென, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இளவாலை திருமறைக் கலா மன்றம் நடத்தும், நாடகப் போட்டி நாளை மாலை 4 மணிக்கு இளவாலை திருமறைக் கலாமன்ற செயலர் கு.சிவலிங்கம் தலைமையில், இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நாடகக் குழுக்கள், மன்றங்கள் பங்குகொள்ளும் இந்த நாடகப் போட்டி விழாவில், பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலர் குணராசாவும், சிறப்பு விருந்தினராகப் பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்க தலைவர் வைரவநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (71)

## வடமராட்சி கிழக்கு மாவீரர் தின நிகழ்வு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உடுத்துறை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 250 மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், உடுத்துறையில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில், 250 கல்லறைகளில் மாலை அணிவித்து, விளக்கேற்றும் நிகழ்வுகள் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (122)

# உரிமைகளுக்காக ஆயுதமேந்துவது போராட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே!

### மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கக்கூடாது என்ற பேரினவாதிகளின் குரல்களே, தென்னிலங்கையில் பலமாக ஒலிக்கின்றன. தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்கள் - தென்னிலங்கையில் மிகக் குறைவாகவே காணப்படுகிறார்கள். எனவே, தமது விடுதலையை வென்றெடுக்க தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - முனைத்தீவு சக்தி மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

போராட்டம் என்பது ஆயுதம் ஏந்தி போராடுவது மட்டுமல்ல, அது போராட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே. ஒவ்வொரு மனிதனும் போராட்டத்திற்குப் பங்களிப்பு செய்யமுடியும். காலத்திற்குக் காலம் மாறிமாறி ஆட்சிக்கு வரும் சிங்கள அரசுகள்- தமிழர்களின் உரிமைகளைத் தருவதற்குத் தயாராக இல்லை. தமிழர்களுக்கு உரிமையைக் கொடுக்கக் கூடாது என்றே தென்னிலங்கை அரசியல்வாதிகள் கூறிவருகின்றனர்.

இவர்களுக்கு எதிராகச் சிங்கள சமூகம் என்ன செய்துள்ளது என்றால், அது பூச்சியமாகவே உள்ளது. இந்த நிலையில்தான், தமிழர்கள் எல்லோரும் ஒன்றுபடவேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் ஐந்து குழந்தைகளில், ஒரு குழந்தை உளவியல்ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கல்வித்திணைக்கள புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறார்கள் - பாடசாலைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு ஏற்றபடி நல்ல ஆலோசனைகளை வழங்கி, அவர்களை அறிவியல்ரீதியாக வளர்க்க வேண்டும் என்று மட்டு-அம்பாறை அரசியற்துறை பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார். (01)

## மீசாலை - பங்களா வீதி திருத்தப்படவில்லை

மீசாலை - பங்களா வீதியின் புனரமைப்பிற்குக் கற்கள் பறிக்கப்பட்ட நிலையில், இதுவரை எவ்வித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது மழைகாலம் ஆரம்பித்ததையடுத்து, வீதியிலுள்ள குழிகளில் நீர் நிரம்பிக் காணப்படுவதால், வீதியால் போக்குவரத்து மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

வீதியின் இரு மருங்கும் கற்கள் பறிக்கப்பட்டு நீண்டகாலமாகியும், வீதியைப் புனரமைக்கவில்லை என இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (34,29)

## திருத்தப்படாத வீதியால் போக்குவரத்து சிரமம்

சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவனுக்குச் செல்லும் வீதியானது, கொத்தியாலடி இந்து மயானத்துக்குச் சமீபமாகச் சேதமடைந்துள்ளநிலையில் காணப்படுகிறது.

இந்த வீதியானது, குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், மழைநீர் தேங்கி, போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக உள்ளது.

அதிகாலையில் இந்த வீதியால் வியாபாரிகள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், பாடசாலை சேவை பஸ்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பாதசாரிகள் பயணம் செய்வதால், இவர்கள் தமது பயணத்தில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள். (42)

# விவேகானந்தர் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள்

சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி தினத்தையொட்டிய, ஆன்மீக எழுச்சிவாரம் - எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை வழமைபோல கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இதனையொட்டி, பாடசாலை மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. மாணவர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தில் - முழுப்பெயர், தரம், பாடசாலை, பிறந்ததிகதி, விண்ணப்பிக்கும் போட்டிகள் ஆகிய விபரங்களை எழுதி, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் செயலாளர், சுவாமி விவேகானந்தர் நற்பணி மன்றம், 86, பொற்பதி வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால்மூலமோ அனுப்பிவைக்கலாம் என்றும், மாணவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்குமுன் அனுப்பிவைக்குமாறும், பொதுவான தலைப்பாக "சுவாமி விவேகானந்தரும் இந்து சமய மறுமலர்ச்சியும் என்பதாக இருக்குமென்றும் மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.




## விண்ணப்பத்திகதி நீடிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 2004 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் த.இராசரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதன்படி, கடந்த 10 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்த விண்ணப்பத் திகதி - இம்மாதம் 28 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி சான்றிதழ்களைப் பெறவும்!

### அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்தவர்களை தகைமைச் சான்றிழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு, தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் யோகராஜன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்தவருடம் இடம்பெற்ற பயிற்சிநெறிகளைப் பூர்த்திசெய்து கொண்டோருக்கான பரீட்சையில், சித்தியெய்திய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் கடந்தகாலங்களில் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்து, இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் சான்றிதழ்களும் - தொழில்நுட்பக் கல்லூரியில் தேங்கிக்கிடக்கின்றன.

எனவே, அவற்றை மாணவர்கள் அலுவலக நேரங்களில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ப)

# கசிப்பு உற்பத்தியாளருக்கு சிறைத்தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தி செய்த குற்றத்திற்காக, கைது செய்யப்பட்ட ஒருவருக்கு நீதிமன்றத்தால் ஆறுமாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஊரெழு மேற்கைச் சேர்ந்த ஒருவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளின் போதே, மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் இந்தத் தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்தார்.

சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தி செய்பவர்களுக்கு அண்மைக் காலமாக சிறைத் தண்டனைகள் விதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சாதாரணதர மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள்

இராமநாதன் வீதியிலுள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனம் நடத்தும், சாதாரணதர மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள் - நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 4 நாட்கள்வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இதில் ஆங்கிலம், தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான மீட்டல் வகுப்புகள் நடைபெறவுள்ளன. (44)

## நெடுந்தீவுக்கு மின்சாரம்

நெடுந்தீவு மேற்கிற்கான மின்சார விநியோகம் தொடர்பாக - மின்சார சபையின் சுன்னாகம் பொறியியலாளர் குழுவினர், நேற்று முன்தினம் நெடுந்தீவுக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்தனர்.

பி.எஸ்.டி.ஜி. நிதியொதுக்கீட்டின் மூலம், இதற்கென 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான மின் இயந்திரம் - நெடுந்தீவு பிரதேச சபையினரால் வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. பெரும் இழுபறி நிலையின் பின்னர், இவர்கள் நேற்று முன்தினம் நிலைமைகளைப் பார்வையிட்டுச் சென்றமை - நெடுந்தீவு மேற்கு மக்கள் மின்சாரம் பெறும் நிலையை உறுதிப்படுத்தியுள்ளது.(113)

# பிறப்பு,இறப்பு பதிவாளர் பதவிக்கு நெடுந்தீவில் விண்ணப்பம் கோரல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடமையாற்றக்கூடிய விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நெடுந்தீவு மத்திக்கு - விவாகப் பதிவாளருக்கான விண்ணப்பமும், நெடுந்தீவு மேற்கு, கிழக்கு பகுதிகளுக்கு - விவாக, பிறப்பு, இறப்பு, பதிவாளர்களுக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி குறிப்பிட்ட பிரதேசத்தில் வசிப்பவராக இருப்பதுடன், 21 வயதுக்கும் 60 வயதிற்கும் இடைப்பட்டவராகவும் இருக்கவேண்டும்.

பதவிக்கான விண்ணப்பப்படிவங்கள் - யாழ். மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்று, எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்து அனுப்பப்படல் வேண்டும்.

இந்தப் பதவி வெற்றிடம் தொடர்பான அறிவுறுத்தல்கள் - நெடுந்தீவிலுள்ள சகல அரச, தனியார் திணைக்களங்களிலும், கிராம அலுவலர் பணிமனைகளிலும் விளம்பரப் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளது. (113)

# மீளக்குடியமர்ந்தோருக்கு யு.என்.எச்.சி.ஆர். உதவி

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் கடந்த வருடம் 22 ஆம் திகதிக்கு பின்னர் இந்தியாவில் இருந்தும், வன்னியில் இருந்தும் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு - யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினரால், நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் வைத்து, உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டன.

40 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுப்பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஏற்கெனவே கடந்த ஆவணி மாதம் 67 குடும்பங்கள் இந்த நிறுவனத்தின் உதவியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த உதவி வழங்கும் நிகழ்வில் - யு.என்.எச்.சி.ஆர் திட்ட அலுவலர் ஃபேர்கஸ் தொமஸ் கலந்துகொண்டு, மக்கள் குறைகளை அறிந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## கந்தரோடைப் பகுதியில் திருட்டுச்சம்பவம்

(கந்தரோடை)

கந்தரோடையில் இரு வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.


சகோதரர்களான- க.இரத்தினராசா, க.செல்வராசா ஆகியோரின் அருகருகேயுள்ள வீடுகளில் - வீட்டார் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளையில் வேலிகளைப் பிரித்து உள்ளே நுழைந்த திருடர்கள் - நீர் இறைக்கும் இயந்திரம், துவிச்சக்கர வண்டி மற்றும் ஆடுகள் என்பனவற்றை இரவோடிரவாக திருடிச் சென்றுள்ளனர். (69)

# வேலையில்லை என்றிருப்பதைவிட சுயதொழில் முயற்சியில் ஈடுபடலாம்

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

தொடர்ச்சியாக நான்கைந்து நாட்களாகப் பெய்த மழை, ஓய்ந்திருந்தவேளை, மதியம் 2.45 மணியளவில் யாழ்ப் பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிக்கொண்டிருக்கும் 'சுவீற்ரி நெல்லிரசம்' நிறுவனத்தின் உரிமையாளர்



ரி.கெங்கேஸ்வரன்

ரி.கெங்கேஸ்வரனைச் சந்திக்கிறோம்.

**இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தமைக்கான பிரத்தியேகக் காரணங்கள் ஏதாவது இருக்கின்றதா?**

என எமது செவ்வியை ஆரம்பித்தோம்.

ஒருசுயதொழில் என்றரீதியிலேயே நான் இதனைத் தேர்ந்தெடுத்தேன். 20 வருடங்களுக்கு முன்னர், வேலை காரணமாக அரேபிய நாடான குவைத் சென்றபொழுது, அங்கு இந்தத் தொழிலைக் கற்றுக்கொண்டேன். மீண்டும் இங்கு வந்து, பதினான்கு வருடங்களுக்கு முன்னர் இத்தொழிலை ஆரம்பித்தேன். இதற்கு முன்னர் என்னுடைய குடும்பத்தில் எவரும் இந்தச் சுயதொழில் முயற்சியில் ஈடுபடவில்லை.

ஆனால், எனக்குப் பின்னர் என்னுடைய பிள்ளைகள் இதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வார்கள். அவ்வாறு தொடர்ந்து மேற்கொள்ள உரியநடவடிக்கைகள் செய்து வருகிறேன்.

தொழிலை ஆரம்பிக்கும்பொழுது - இயந்திரங்கள் எதுவுமின்றி உற்பத்தியில் ஈடுபடக்கூடிய உபகரணங்களையே பயன்படுத்தினோம். எங்களுடைய இருப்பிடத்திலேயே தொழிலகத்தையும் அமைத்துக்கொண்டோம். முழுநெல்லியை எடுத்துக் கயர்ப்பு சுவை இல்லாமல் நீக்கி, அவித்துச் சாறு எடுத்து, பின்னர் அவற்றுக்குரிய குளுக்கோஸ் பாணியைக் கலந்து, காய்ச்சி எடுத்து - கண்ணாடிப் போத்தல்களிலும், பிளாஸ்டிக் கலன்களிலும் அடைக்கிறோம் எனத் தெரிவித்தார்.

**எத்தனை தொழிலாளர்கள் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனக் கேட்டபொழுது,**

தற்பொழுது ஒன்பது பேர் உற்பத்தியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். முன்னர் பலர் வேலை செய்தார்கள். ஆனால், தற்பொழுது முன்னர்போல் நிலைமைகள் நன்றாக இல்லாதபடியால், வேலையாட்களின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளோம் என்றவர், தொடர்ந்து -

எங்களிடம் வேலைக்கு வந்த பிற்பாடு, ஊழியர்களுக்கு மூன்றுமாத காலங்கள் வேலைநுட்பங்கள், விதிமுறைகள், பயிற்சிகள் என்பன தொடர்பாக வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. அந்தப் பயிற்சிகளின் பின்னர், வேலையில் உள்வாங்கப்படுகின்றார்கள் எனக்கூறினார்.

**மூலப்பொருட்களை எங்கிருந்து பெற்றுக்கொள்கிறீர்கள் எனக் கேட்டபொழுது -**

நெல்லிக்கனிகளை எங்களுடைய பிரதேசத்தில் ஒரு தரகர் கடைமூலம் பெற்றுக்கொள்கிறோம். ஏனைய இரசாயன வகைகளைக் கொழும்பிலிருந்து பெறுகிறோம் எனக்கூறினார்.

**அவ்வாறெனில், எந்தெந்தக் காலப்பகுதியில் நெல்லிரசம் உற்பத்தி நடைபெறுகின்றது?**

நெல்லிக்காய்கள் கிடைக்கும் காலப்பகுதியில்தான் உற்பத்தி நடைபெறுகின்றது. வருடத்தில் 6 மாதங்கள் மட்டுமே நெல்லிக்காய்கள் கிடைக்கும். ஆனால், இந்தக் காலப் பகுதியில் அடுத்துவரும் ஆறுமாதங்களுக்கான நெல்லிக்கனிகளையும் சேகரித்து வைக்கிறோம். சேகரித்து வைத்தவைகள் பழுதடையாமல் இருக்க, பாதுகாப்பு இரசாயனக் கலவைகளை உபயோகிக்கிறோம். இவற்றைத் தேவையைப் பொறுத்தே பயன்படுத்துவோம்.

இதனைச் சுகாதாரசேவைப் பிரிவு அதிகாரிகளும் அடிக்கடி எம்மிடம் வந்து உறுதிசெய்துகொள்கிறார்கள். அவர்களுடைய கண்காணிப்பிலேயே எமது உற்பத்தி நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு வருடமும் இவ்வாறே நடைபெறுகின்றது என்றவரிடம்,

**நெல்லிரசம் உற்பத்தியளவு தொடர்பாக ஏதாவது திட்டங்கள் இருக்கின்றதா?** என வினவினோம்.


நாங்கள் தற்பொழுது ஒரு மாதத்திற்கு எவ்வளவு தேவை என்று கணக்கு வைத்து, அந்தளவு உற்பத்தியில் ஈடுபடுகிறோம். ஒரு மாதத்திற்கு 3500 முழுப்போத்தல்களும், 1500 பிளாஸ்டிக்கலன்கள் நெல்லிரசமும் தயாரிக்கிறோம் என்றார்.

**இலாபத்தை அதிகரிக்க ஏதாவது முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்களா?**

ஆரம்பத்திலிருந்தே எங்களுடைய தொழில் சொந்த முதலீட்டிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இலாபம் முழுக்கக் கிடைக்கும். ஏ-9 பாதை மூடியிருந்த பொழுது, போத்தல் வகைகள் மலிவாகக் கிடைத்தது. பாதை திறந்த பின்னர், போத்தல்கள் வெளியிடங்களுக்குப் போகத்தொடங்கிவிட்டது.

முன்னர் மூன்று ரூபாவிற்கு வாங்கக்கூடியதாக இருந்தது. தற்பொழுது போத்தல் பதினைந்து ரூபாவாக விலைகூடிவிட்டது. அதனால் இலாபம் குறைந்துவிட்டது.

நெல்லிரச இலாபத்தில் போத்தல் நட்டம் 12 ரூபா ஈடுகட்டப்படுகின்றது. போத்தல் விலை கூடிவிட்டது என்பதற்காக, பொருளின் விலையைக் கூட்டவில்லை, தரத்தையும் குறைக் கவில்லை. தொடங்கிய தொழிலை விடக்கூடாது என்று தொடர்கிறோம். இங்கு மீண்டும் கண்ணாடித் தொழிற்சாலை உற்பத்திகள் சாத்தியப்பட்டால், எம்போன்றவர்களுக்கு உதவியாக இருக்கும்.




**மக்கள் மத்தியில் உங்களுடைய நெல்லிரசத்துக்குக் கிடைக்கும் வரவேற்பு எவ்வாறு இருக்கிறது?**

நல்ல வரவேற்பும், அபிப்பிராயங்களும் இருக்கிறது. வியாபாரம் நடைபெறுவதைக்கொண்டு, எங்களால் அதனை உணர முடிகின்றது. திருப்திகரமாக சந்தைப்படுத்தக்கூடியதாகவுள்ளது. கையிருப்பு என்று எதுவும் கடைகளில் தேங்குவதில்லை. பொதிசெய்யப்பட்ட நெல்லிரசத்தை அனுப்புவோம். கடைமூலம் விற்பனை நடைபெறுகின்றது. வீட்டில் தனிப்பட்டரீதியில் விற்பனையில் ஈடுபடுவதில்லை..

**எவ்வாறான இயந்திரங்களைப் பாவித்து உற்பத்தி நடைபெறுகின்றது?**

இயந்திரங்கள் இதற்கென்று இருக்கிறது. பெரிய இயந்திரம் பயன்படுத்துவதில்லை. சிறிய இயந்திரம் ஒன்றை வைத்துத் தேவைக்கு ஏற்றமாதிரி உபயோகப்படுத்துகிறோம்.

**தொழிலை விஸ்த்தரிக்கும் திட்டங்கள் ஏதாவது இருக்கின்றதா?**

ஆம். நிறையத் திட்டங்கள் உண்டு. அதற்கு வங்கிகள் எமக்குக் கைகொடுக்கவேண்டும். நாங்கள் - வங்கிகளுடன் தொடர்புகொண்டிருக்கிறோம். ஆதாரங்கள், ஆவணங்கள் கேட்கிறார்கள். அதனால், வங்கியூடாக விஸ்தரிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தமுடியாமல் உள்ளது.

நிதி இருந்தால், தற்போதைய நிலையைவிட பத்து மடங்கு அதிகரிக்கமுடியும். கடன்பட்டுத் தொழில் மேற்கொள்ள விரும்பவில்லை. நிதி இருந்தால், பெரியளவில் நிறுவனத்தைக்கொண்டு நடத்தமுடியும். பலருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கலாம். நிதிப்பற்றாக்குறையால் எதுவும் செய்யமுடியாத நிலையிலேயே நாம் இன்று இருக்கிறோம்.

**தாங்கள் உற்பத்திக்கான விளம்பரங்களை எவ்வாறு மேற்கொள்கிறீர்கள்?**

விளம்பரங்கள் என்று பெரிதாக எதுவும் மேற்கொள்வதில்லை. எங்களுடைய தரத்தால்தான் தாக்குப்பிடித்துக் கொண்டிருக்கிறோம். இதுவரை பணம் கொடுத்து ஊடகங்களுககு விளம்பரம் கொடுக்கவில்லை. தரம்மூலமாகவே விளம்பரம் கிடைத்து, வியாபாரம் நடைபெறுகின்றது. விளம்பரம் கொடுக்க விருப்பமில்லை என்றில்லை. தரத்தைப் பயன்படுத்தி, முன்னுக்கு வருவோம் என்ற நம்பிக்கையில் இருக்கின்றோம்.

**பதினான்கு வருடகால தொழில் முயற்சியில், எதிர்கொண்ட நெருக்கடிகள், பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்** என்று கேட்டபோது,

யுத்த சூழ்நிலை காரணமாகத்தான் தொழில் சிலசமயம் இடையூறுகளைச் சந்தித்தது. இருந்தபோதும், தொழிலை முன்னெடுத்துச் சென்றோம். இடம்பெயர்ந்தபொழுது, எமது தொழிலைப் பளையிலுள்ள இத்தாவில் பகுதியில் நடத்தினோம்.

**அண்மையில் நடைபெற்ற புத்துலகப் பிரவேசம் கண்காட்சியில் பங்குபற்றினீர்களா?**

பங்குபற்றச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அந்தச் சமயம் நான் யாழ்ப்பாணத்தில் நிற்கவில்லை. அதில் பங்குபற்றாதது மனவருத்தமே. ஆனால், வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இங்குவந்து, நெல்லிரசம் பெற்றுச்சென்றார்கள்.

**தென்னிலங்கையிலிருந்து வரும் குளிர்பானங்களோடு, உங்களுடைய உற்பத்தி ஈடுகொடுக்க முடிகிறதா?**

ஆம். ஈடுகொடுக்க முடிகிறது. தென்னிலங்கைக் குளிர்பானங்களால் பாதிப்பில்லை. உண்மையில் வியாபாரம் கூடி இருக்கிறது. காரணம், யாழ்ப்பாண நெல்லிரசத்தை எல்லோரும் விரும்புகிறார்கள். அதனால், இங்குவரும் ஏனைய பிரதேச மக்களும் இதனை விரும்பி வாங்கிச் செல்கிறார்கள்.

**வேலையற்றோர் அதிகரித்துச் செல்லும் இந்தச் சூழ்நிலையில், சுயதொழில் ஆரம்பிக்க விரும்புபவர்களுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

இவ்வாறான பல உற்பத்திகள் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளமுடியும். ஒவ்வொருவரும் இதனை அறிந்துகொணடு, உற்பத்தி முயற்சியில் ஈடுபடக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறது.

நாங்கள் நெல்லிரசம் தயாரிக்கிறோம். வேறுவகையான உற்பத்தியில் ஈடுபட நிதிவசதி இல்லை. யாழ்ப்பாணத்தில் பழவகைகள் நிறைய கிடைக்கின்றன. பழங்கள் மலிவான காலங்களில், தக்காளி சோஸ், மாம்பழரசம், கோடியல் வகைகள் போன்றவற்றைத் தயாரிக்கலாம்.

இவ்வாறான தொழில் தொடங்கச் சாதாரணமாக ஐந்து இலட்சம் ரூபா வரையில் தேவை. மூலப்பொருளிலிருந்து சந்தைப்படுத்தல் வரைக்கும் ஒருசீராக விநியோகம் நடைபெற, மேற்சொன்ன முதலீடு தேவை.

எனக்கு உற்பத்திச் செய்முறைகள் தெரியும். யாரும் தொடர்புகொண்டு கேட்டால், சொல்லிக்கொடுக்கத் தயாராகவுள்ளேன் என பெருமனத்தோடும், ஆவலோடும் தெரிவித்தார். அன்போடு எமக்கு வழங்கப்பட்ட சுவீற்ரி நெல்லிரசத்தைப் பருகிய பின்னர், இன்முகத்துடன் விடைபெற்றுக் கொண்டோம்.

நேர்காணல் -
இரா.சுபோதினி
இ.சர்வேஸ்

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 40/= | 60/= | 50/= | 50/= |
| வெண்டிக்காய் | 20/= | 30/= | 20/= | 20/= | 15/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 80/= | 70/= | 60/= | 60/= |
| கத்தரிக்காய் | 40/= | 40/= | 50/= | 40/= | 60/= |
| பாகற்காய் | 55/= | 40/= | 60/= | 60/= | 60/= |
| கரட் | 40/= | 60/= | 60/= | 50/= | 40/= |
| பீற்றூட் | 15/= | 30/= | 30/= | 20/= | 20/= |
| முருங்கைக்காய் | 90/= | 40/= | 80/= | * | 70/= |
| வெங்காயம் | 40/= | 45/= | 50/= | 40/= | 45/= |
| பச்சை மிளகாய் | 50/= | 40/= | 40/= | 50/= | 50/= |

# எமது பிரதேசத்திலிருந்து அருகிச்செல்லும் மரமுந்திரிகைச் செய்கை

எமக்கெல்லாம் மரமுந்திரிகை என்பதை விடுத்து, கஜு" என்று சொன்னால்தான் அட அதுவா! என்று வாய்பிளப்போம். இந்த மரமுந்திரிகை அல்லது காட்டுமுந்திரிகை என்று அழைக்கப்படும் கஜு" (**Anacardium Occidentale.L**) பற்றி நாம் பலதரப்பட்ட தின்பண்டங்களினூடாக அதிகம் தெரிந்து வைத்துள்ளோம். இனிப்புத் தின்பண்டங்களாயினும் சரி, உறைப்புத் தின்பண்டங்களாயினும் சரி - இந்தக் கஜு" இல்லாது சமைப்போமாயின், அதற்குரிய தனிச் சுவையின்றி வலுவிழந்து போய்விடுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை கஜு"வத்தை என்ற இடமேயுள்ளது என்றால், இதன் மகிமை பற்றி இலங்கைப் பிரஜைகள் யாவரும் தெரிந்து வைத்திருப்பது அவசியமாகும்.

பதினாறாம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் - கஜு"வை பிரேசில் நாட்டிலிருந்து இலங்கைக்கு அறிமுகப்படுத்தினர். இலங்கையில் நிலவுகின்ற சாதாரண காலநிலைத் தன்மை, மரமுந்திரிகை வளர்ச்சிக்கு ஏற்றதாக அமைந்ததால், மரமுந்திரிகைச் செய்கை அந்தக் காலத்தில் அமோக வளர்ச்சியடைந்தது. குறிப்பாக எமது தமிழ்ப்பிரதேசங்களை அதிகம் உள்ளடக்கும் உலர்வலயங்களில் நிலவுகின்ற இரு பருவப்பெயர்ச்சிக் காற்றுகளும், மரமுந்திரிகைச் செய்கைக்கு ஏற்றவாறு மழைவீழ்ச்சியைக் கொடுப்பதனால், இலங்கையில் உலர்வலயமே மரமுந்திகைச் செய்கைக்குப் பெயர்பெற்றது.

ஏனைய பணப்பயிர்களைப் போன்று, அதிக விளைச்சலைக் கொடுத்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் அதிக வருவாயைப் பெற்றுத்தரக்கூடிய இந்த மரமுந்திகைச் செய்கைபற்றி யாரும் அதிக கவனம் எடுப்பதில்லை. குறிப்பாக எமது தமிழ் பிரதேசங்களில் மரமுந்திரிகைச் செய்கைக்கேற்ற காலநிலை மற்றும் போதிய விவசாய நிலமிருந்தும், எம்மக்கள் அதனை ஒரு காட்டுப்பயிராக நினைத்து கவனமெடுக்கத் தவறுகின்றனர்.

மரமுந்திரிகைச் செய்கை எமது பிரதேசத்தில் பிரசித்தி பெற்று விளங்கியது என்பதற்கு - இன்னொரு சான்றாக அதன் வர்க்கங்களின் பெயர்களைக் குறிப்பிடலாம். உதாரணமாக - கொண்டச்சி, மன்னார், மட்டக்களப்பு போன்ற எமது பிரதேசப் பெயர்களைத் தாங்கிநிற்கும் மரமுந்திரிகை வர்க்கங்களை எடுத்துக்கொண்டால், இது பற்றி நன்குபுரியும்.

அன்றைய சில அரசியல்வாதிகளின் ஆத்மார்த்த சில நல்ல நடவடிக்கைகளில், இந்த மீள்வளமாக்கல் விடயமும் முக்கிய இடத்தை வகித்துள்ளது. அந்த அடிப்படையில், வன்னிப்பகுதியின் பல பிரதேசங்களில் உருவாக்கப்பட்டு, இன்றும் காணப்படும் மரமுந்திரிகை நடுகைத்திட்டத்தைச் சொல்லலாம். ஆனால், திட்டங்கள் பெயரளவிற்கு உருவாக்கப்பட்டதோடு சரி, அதனை ஒழுங்கானமுறையில் நடைமுறைப்படுத்தாது விட்டதனால், இன்றைய மக்கள் மரமுந்திரிகையையும் காட்டு மரத்தோடு, காட்டுமரமாக எண்ணிக் கைவிட்டுவிடடார்கள்.

எனவே, இந்த மரமுந்திரிகைச் செய்கை, அதன் முக்கியத்துவம் பற்றி ஓரளவிற்கேனும் எமது மக்களுககுச் சொல்லவேணடுமென விழைந்து, இக்கட்டுரை வரையப்படுகிறது.

மரமுந்திரிகையானது, ஓர் பல்லாண்டுக்குரிய மரவர்க்கத்தாவரமாகும். இதன் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளில், சுமார் 80 வீதத்துக்கு மேற்பட்டோர் நாற்றுக்களைக் கொண்டே செய்கையை ஆரம்பிக்கின்றனர். இதனைவிட, பதியமுறை இனப்பெருக்கங்களான இளந்தண்டு ஒட்டுமுறை, காற்றுக்குரிய பதி வைப்பு மற்றும் அரும்பு ஒட்டுமுறை என்பவற்றையும் சிறிய அளவில் ஆங்காங்கே பயன்படுத்துகின்றனர். மரமுந்திரிகைக்குரிய நாற்றுமேடை தயாரிப்பதாயின் - பொதுவாக அது ஆவணி தொடக்கம் புரட்டாதி மாதம் வரையிலும்- ஒட்டுமுறையைப் பயன்படுத்துவதாயின், வைகாசி தொடக்கம் ஆனி வரையிலான காலப்பகுதியும் சிறந்ததாகும். நாற்றுக்களுக்கான சிறந்த, தரமான விதைகளையும், ஒட்டுதலிற்குரிய ஒட்டுமரம் மற்றும் ஒட்டுக்கிளை போன்றவற்றையும் - இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் ஆய்வகப் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இனி எவ்வாறு ஒரு மரமுந்திரிகைத் தோட்டத்தை உருவாக்கிக்கொள்ள முடியும் என்பதைப் பார்க்க விழையுமிடத்து - சிவப்பு சேர் மஞ்சள் இலட்டசோல் (**Red yellow latasols**) அல்லது மணற்பாங்கான றெகோசோல் (**Sandy regesols**) அல்லது சிவப்பு சேர் மண்நிறமண் (**Reddish Brown earth**) போன்ற மண்வகைகளைக்கொண்ட ஓரளவு தட்டையான விவசாய நிலம் போதுமானது.

தெரிவுசெய்யப்பட்டு சிறந்தமுறையில் துப்பரவு செய்யப்பட்ட நிலத்தில், தெரிவு செய்யப்பட்ட வீரியமான நாற்றுக்களை அல்லது ஒட்டுக்கன்றுகளை 30x30 அடி அல்லது 35x35 அடி நடுகை இடைவெளியில். ஏற்கனவே 2x2x2 அடி பரிமாணத்தில் அகழப்பட்ட குழியில் நாட்டவேண்டும். இந்திய ஆய்வாளர்களின் சிபாரிசின்படி, நடுகைக் குழியில் மேல் மண்ணுடன் 5kg கூட்டுப்பசளை அல்லது 2kg கோழி எருவுடன், 200g



பாறைப்பொசுபேற்று கலந்து, பின்னர் நாற்றுக்களை நாட்டல்மூலம் உயர்பயனைப் பெற்றுக்கொள்ளலாம். அந்தளவிற்கு எமக்கு வசதியில்லாதுவிடினும், சாதாரண கூட்டெருவை மட்டும் பயன்படுத்தலாம். நாற்றுக்களை நடுவதற்குரிய சிறந்த காலமாக - மழை ஆரம்பிக்கும் ஐப்பசி மாதமே சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

பொருத்தமான காலத்தில், பொருத்தமான முறையில் நடுகை பண்ணப்பட்ட மரமுந்திரிகையானது - தனது மூன்றாவது வயதில் அதாவது, மூன்றாவது வருடத்திலிருந்து பூத்துக் காய்க்க ஆரம்பிக்கின்றது. உச்ச விளைவைத் தனது எட்டாவது வயதில் தர ஆரம்பிக்கின்றது. வருடமொன்றில் கார்த்திகை மாத ஆரம்பத்திலிருந்து பூக்க ஆரம்பித்தால், அது அடுத்த வருடத்தின் பங்குனிவரை நீடிக்கின்றது. ஆனாலும், பூத்தல் செயற்பாடானது- காலநிலை மற்றும் ஏனைய சூழல் காரணிகளிலும் தங்கியுள்ளது. எவ்வாறாக இருப்பினும், எமக்கான இரு போகங்களிலும் விளைவைத்தரும் ஒரு மரமுந்திரிகையின் சாதாரண ஆயுட்காலம் - 30 ஆண்டுகள் எனச் சொல்லப்படுகின்றது. மரமுந்திரிகையின் ஆயுட்காலத்தினுள் உச்சவிளைவைப் பெறவேணடுமாயின், சரியானதும் பொருத்தமானதுமான பயிர்செய்கை முகாமைத்துவத்தையும், பயிரியல் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தல் வேண்டும்.

அந்தவகையில், முதல் நான்கு வருடங்களிலும் மரத்தின் தேவையற்ற கிளைகளை வெட்டி, வெட்டுமுக காயங்களினூடாகத் தொற்றுதல் ஏற்படாத வண்ணம் அவற்றிற்கு மரமுந்திரிகை விதைத்திரவத்தை (இது பற்றி பின்னர் பார்க்கவுள்ளோம்) பூசிவிடல் வேண்டும். இவ்வாறான பயிர்ச்செய்கை தொழில்நுட்பம் அதிக பூத்தலைத் தூண்டவதுடன், பழங்களை அறுவடை செய்வதற்கும் வசதியை ஏற்படுத்துகின்றது. இதைவிட, தேவையற்ற களை முளைத்தலையும், பொருத்தமான முறையில் கட்டுப்படுத்தவேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை - மரமுந்திரிகையானது மானாவாரியாகப் பயிர் செய்யப்படுவதனால், மழைநீரைச் சேமித்தல் முக்கியம் ஆகும். எனவே, உலர்மாதங்களில் ஏற்படும் நீர்ப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக, காய்ந்த களைகளைக்கொண்டு அல்லது இலைகளைக்கொண்டு அல்லது தென்னந்தும்புகளைக் கொண்டு பத்திரக்கலவை இடலாம்.

மரமுந்திரிகைச் செய்கையில் ஏற்படும் பொதுவானதும், அதேவேளை தீவிரமானதுமான ஒரு பிரச்சினை - உலர் காலநிலை நிலவும் நாட்களில் ஏற்படும் தீ விபத்தாகும். மரக்கிளைகள் ஒன்றுடன் ஒன்று உரசுவதனால், தீ ஏற்படலாம். இந்தத் தீ விபத்திற்கு **Pennisetum polystachyon** மற்றும் **Imperata cylindrica** போன்ற களைகளும் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்றன. எனவே, இப்படியான தீ விபத்துக்களைத் தவிர்க்க, பாதுகாப்புப் பயிர்கள் அல்லது தடுப்புப் பயிர்களாகக் கிளுவை மற்றும் இப்பிலிப்பில் போன்ற மரத்தாவரங்களை - மரமுந்திரிகை தோட்டத்தில் பயிரிடலாம்.

மரமுந்திரிகைத் தோட்டத்திலிருந்து உச்சப்பயனைப் பெறும் அதேவேளை, தோட்டத்தில் சில ஊடுபயிர்களை வளர்ப்பதன்மூலம் மேலும் பயனடையலாம். வாழையை ஊடுபயிராகச் செய்தலே இலங்கையில் பிரபல்யமானது. ஆனால் - அன்னாசி, பப்பாசி, மாதுளை என்பவற்றோடு, தென்னையும் மரமுந்திரிகைக்கு உரிய ஊடுபயிராகச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இவற்றைவிட அவரைத் தாவரங்களான கௌபி, உழுந்து, பயறு போன்றவையும், எண்ணெய்த் தாவரங்களான - எள், நிலக்கடலை போன்றவையும் வாசனைப் பயிர்களான மிளகு, வெங்காயம் முதலிய பல ஆண்டுத் தாவரங்களும் - மரமுந்திரிகை தோட்டத்தில் செய்கை பண்ணக்கூடிய ஊடுபயிர்களாகும்.

எமது தேசத்தைப் பொறுத்தவரை அதிகம் செலவு செய்யாது, அதாவது பசளைச் செலவு, நீர்ப்பாசனச் செலவு போன்ற செலவுகள் அதிகமில்லாது, செய்கை பண்ணக்கூடிய ஓர் பயிராக இந்த மரமுந்திரிகை உள்ளதெனினும், நன்கு பூக்கத்தொடங்கிய முதிர்மரங்களுக்கு- மரத்திற்கு **2.5. kg npk** (3:2:1) பசளையை இட்டால், எதிர்பார்க்கும் விளைவைவிட அதிக விளைவைப் பெறமுடியும்.

மரமுந்திரிகையைத் தாக்கக்கூடிய பீடைகளையும், நோய்களையும் பற்றிப்பார்க்கும் போது, தேயிலை நுளம்பு (**Helopeltis antonii**) மற்றும் தண்டுதுளைப்பான் (**Plocaederus Ferrugineus**) என்பன முக்கிய பீடைகளாக உள்ளன. இவற்றுள் தண்டுதுளைப்பானைக் கட்டுப்படுத்துவதற்குச் சிறந்த முறைகளாகத் தேவையற்ற மற்றும் பாதிப்புற்ற மரக்கிளைகளை அகற்றுதல், தண்டு துளைப்பானின் புழுக்களைக் கைகளால் சேர்த்து அழித்தல் என்பவற்றுடன், விதைத் திரவத்தை (**CNSL**) பொருத்தமான பூச்சிக் கொல்லியுடன் சேர்த்து விசிறல், போன்றன அடங்குகின்றன. இந்தத் தண்டுதுளைப்பானின் உச்சப்பரம்பல் - ஆடி, ஆவணி மாதங்களில் அதிகம் இருப்பதால், இந்த வேளையில் பொருத்தமான கட்டுப்பாட்டு முறைகளைக் கைக்கொள்ளல் அவசியம் ஆகின்றது.

அத்தோடு, இந்தத் தேயிலை நுளம்பு என அழைக்கப்படும் பூச்சியினால் - பூக்களே அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றன. அத்துடன், இவை கார்த்திகை தொடக்கம் தை மாதங்களில் அதிகபரம்பலில் உள்ளதால், விளைவில் கணிசமான அளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

அதேவேளை, மரமுந்திரிகையில் ஏற்படும் முக்கிய நோய்களாக - நாற்று மேடை பருவத்தில் ஏற்படும் அழுகல் (**Damping off**) மற்றும் முதிர்பருவத்தில் ஏற்படும் அங்குர அழுகல் (**Shoot die - back**) போன்றவை பிரதானமானவை. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு **Captain** அல்லது **Benlate** போன்ற பொருத்தமான பங்கசு நாசினிகளைப் பாவிக்கலாம்.

மேற்சொல்லப்பட்டவாறு பொருத்தமான முறைகளில் சகல பயிர்ச்செய்கைத் தொழில்நுட்பங்களையும் நடைமுறைப்படுத்தியிருப்பின், மரமுந்திரிகையிலிருந்து விளைவை அறுவடை செய்தலே அடுத்த நடவடிக்கையாகும். பொதுவாக மரமுந்திரிகையின் விளைவு என்று கருதுமிடத்து - நன்கு முற்றிய பழத்திலிருந்து விழும் விதைகளே கருத்திற்கொள்ளப்படுகின்றன. தண்டுக்கனியம் என்ற வகைக்குள் அடங்கும் மரமுந்திரிகைப் பழமானது, எல்லோராலும் விரும்பி உண்ணப்படுவதில்லை இதற்கொரு காரணமாக - பழத்திலுள்ள வேண்டத்தகாத இரசாயனப் பதார்த்தமும், இதனால் எமக்கு ஏற்படும் அஜீரணக்கோளாறு மற்றும் தோல் காயங்களுமாகும். ஆகவே, போலிப்பழங்களை ஒரு பொருட்டாக எடுக்காது, நாம் விதைகள் என அழைக்கும் உண்மைப் பழங்களை நன்கு முற்றவிட்டு, பின் அவை மரத்தை விட்டு விழுந்தபின் சேரிக்கப்பட்டு, விளைவாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. வழமையாக இந்த விளைவை ஓர் பயிர்ச் செய்கை வருடத்தின் வைகாசி தொடக்கம் ஆடி வரையிலான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். (தொடரும்...)

சுமித்திரா பன்னிருகரன்
பயிரியல்துறை, விவசாயபீடம்
(தகவல் தொடர்பு மையம்)

விவசாயப் பெருமக்களே!

தமிழர் தாயகம் செழிக்கப் பாடுபடும் வேளாண் மக்கள் நீங்கள்.

விவசாயம் தொடர்பாக உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு.

உங்கள் கேள்விகளைக் குறிப்பிட்டு

உழவர் உலகம்
'நமது ஈழநாடு'
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியுடன் நேரிலோ, தபால் மூலமோ உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் கேள்விகளை உரிய துறைசார்ந்தவர்களிடமும் மற்றும் விவசாயபீடம் - தகவல் தொடர்பு மையத்திடமும் சமர்ப்பித்து, உரிய ஆலோசனை பெற்று 'உழைப்போம் உயர்வோம்'- தொழில் மலர்மூலம் உங்களுக்கு வழங்கவுள்ளோம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

-திருக்குறள்.

# நமது நோக்கு

## இதுவே பொருத்தமான தருணம்

யாழ்ப்பாணத்தில் பருவமழை தீவிரமடைந்திருக்கிறது. வழமையைவிடப் பிந்தியதாகப் பெய்யத் தொடங்கியுள்ள மழையின் தீவிரத்தை கடந்த வாரம் அனுபவிக்கக்கூடியதாக இருந்தது.

அடுத்து வரும் வாரங்களில் மேலும் மழை தீவிரமடையும் என்ற எதிர்பார்ப்பு ஒருபுறம் இருக்க, இந்த மழையின் தாக்கங்களை எதிர்கொள்ளும் மக்கள் அனுபவிக்கும் சிரமங்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில சுட்டிக் காட்டத்தக்கது.

வழக்கத்தைவிட இந்தமுறை தாமதமாக மழை பெய்வதால் - குறிப்பாக நெற்செய்கையாளர்கள், தமது விவசாய முயற்சிகளைத் தாமதமாகவே ஆரம்பித்துள்ளனர். இந்தத் தாமதத்தினால் பல்வேறு இயற்கை அழிவுகள், இடர்களை எதிர்கொள்ள நேரிடுமோ என்ற அச்சம் விவசாயிகளிடம் இருந்துகொண்டிருக்கிறது.

அண்மைக் காலமாக பருவமழைக் காலத்தில் விவசாயிகள் பல்வேறு நஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால், இந்த நஷ்டங்களில் இருந்து விவசாயிகளை மீட்க, எந்த உதவித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தென்பகுதி விவசாயிகளைப் பொறுத்தவரையில் - அவர்களுக்கு பல்வேறு காப்புறுதித் திட்டங்கள், உரமானியத் திட்டங்கள் எனப் பல்வேறு உதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன.

விவசாயத்துறை அமைச்சு - இந்தத் துறையை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கில் மட்டுமின்றி, விவசாயிகளின் நன்மை கருதியும் ஏராளமான உதவித் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றது.

ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் குறிப்பாக தமிழ்ப் பகுதிகளிலுள்ள விவசாயிகளைப் பொறுத்த வரையில், இந்த விவசாய நல உதவித் திட்டங்கள் எதுவுமே வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

விவசாயிகளுக்கான நேரடி உதவிகள் என்பதைவிட, குளங்கள் புனரமைப்பு நடவடிக்கையையும் அரசாங்கம் உருப்படியாகச் செய்யவில்லை. அண்மைக் காலமாக உலக வங்கி உதவியுடனேயே அதைக்கூடச் செய்யவேண்டிய நிலைதான் உள்ளது.

நீர்ப்பாசனத் திட்டங்களைக் கூட நடைமுறைப்படுத்தாத அரசாங்கம், விவசாய நடவடிக்கைகளுக்கு எவ்வாறு உதவிகளைச் செய்யும் என்று எதிர்பார்க்க முடியும். வடக்கு - கிழக்கிலே நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பெரும் அழிவுகளைச் சந்தித்த போதெல்லாம் அதற்கான நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

இது போதாதென்று பொருளாதாரத்தடை என்ற பெயரிலும் எரிபொருள், உரத்தடை என்ற பெயரிலும் வட பகுதி விவசாயிகள் நசுக்கப்பட்டனர்.

இன்று இந்த நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் - வடபகுதி விவசாயிகளுக்கான போதிய உதவிகள் அரசாங்கத்தினால் வழங்கப்படுவதில்லை என்பது உண்மையே.

தென்பகுதி விவசாயிகளுக்கு நெல், வாழை என்று அனைத்துப் பயிர்களுக்கும் காப்புறுதித் திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன.


ஆனால், வடபகுதியைப் பொறுத்தவரை இந்த விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படாமல் அல்லது அதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் விவசாயிகள் மழையினையோ அல்லது வரட்சி நிலை போன்ற பாதிப்புக்களை எதிர்கொள்ளும்போது எந்த உதவியும் கிடைப்பதில்லை. இந்த நிலைமையை முழுமையாக மாற்றவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உரியது.

இதுவே விவசாயிகளுக்கு காப்புறுதித் திட்டங்களை வழங்குவதற்கு உரிய தருணம் என்றே கருதவேண்டும்.

இந்தக்காலச் சூழலில் செய்யாத எந்த உதவியும் விவசாயிகளுக்கு பலன்கொடுக்கப்போவதில்லை.

# நாடும் நடப்பும்




# அரசியல்வாதிகளின் சூழ்ச்சிகளால் நாடு சின்னாபின்னமாக்கப்பட்டது!

## தொழிற்சங்கத் தலைவர் லயனல் மல்வத்தகே



சில அரசியல்வாதிகளின் சூழ்ச்சி காரணமாகவே, நாம் துண்டாடப்பட்டோம். பிரதேச ரீதியாகவும், இன, மத ரீதியாகவும் பிரித்துப் பேசப்பட்டோம். அந்த நிலையை மேலும் நீடிக்க நாம் அனுமதிக்கக்கூடாது என, அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனங்களின் தலைவர் லயனல் மல்வத்தகே தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்ற ஊழியர்தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைககழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை - பிரித்தானியர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தபோது, தமிழ்த் தலைவர் சேர் பொன் இராமநாதனுடன் இணைந்தே, சிங்களத் தலைவர்கள் அனைவரும் இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டார்கள். அந்தநிலை மீண்டும் உருவாகவேண்டும்.

இனத்தாலும், மதத்தாலும், மொழியாலும் எம்மை வேறுபடுத்திய அரசியல்வாதிகள் சிலரின் சூழ்ச்சியால்தான், இன்று நாடு சின்னாபின்னப்பட்டு கிடக்கிறது. எங்கள் அனைவருக்கும் இந்த நாட்டிலே உரிமையுண்டு. நாம் சுதந்திரமாகவும், ஒற்றுமையாகவும் வாழவே ஆசைப்படுகிறோம்.

இளைஞர்கள் அனைவரும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி, கைகோர்க்கவேண்டும். இதுவரை காலமும் நடைபெற்ற கொடிய போரின் காரணமாக - ஏராளமான தமிழ் இளைஞர்களினதும், சிங்கள இளைஞர்களினதும் உயிர்கள் அழிக்கப்பட்டன. இனியும் அந்தநிலை தொடர அனுமதிக்கக்கூடாது.

யுத்தத்தின் மூலமாக எமது பிரச்சினையை ஒருபோதும் தீர்க்கமுடியாது. யுத்தத்தின்மூலம் அநியாய இழப்புக்களே ஏற்படும். முன்னர் ஆட்சியிலிருந்த அரசியல்வாதிகள் சிலரால், உண்மையான சமாதானத்தை ஏற்படுத்தமுடியாமல் போய்விட்டது. இன்று மக்கள் மட்டுமல்லாது, ஆட்சியிலிருக்கும் அனைவருமே நிரந்தர சமாதானமே நாட்டுக்குத் தேவையென உணர்ந்திருக்கிறார்கள். நிரந்தரமான சமாதானம் ஏற்பட்டால்தான், நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும். இனமத பேதங்கள் உருவாகாத ஒரு சமூகத்தை உருவாக்கமுடியும். நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்தால், நிச்சயமாக எமக்கு வெற்றி கிட்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்திருந்த ஏராளமான சிங்கள இனத்தைச் சேர்ந்த தொழிற்சங்கவாதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## பொது சுகாதார பரிசோதகர்

# 260 பேர் தேவையான இடத்தில் 90 பேர் மட்டுமே கடமையில்!

பொது சுகாதார உத்தியோகத்தர்கள் 260 பேர் கடமையாற்றவேண்டிய இடத்தில் - 90 பொது சுகாதார உத்தியோகத்தர்களே தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறைந்தளவு பொது சுகாதார உத்தியோகத்தர்களைக் கொண்டு, சுகாதார செயற்திட்டங்களை முன்னெடுக்க முடியவில்லையெனவும், சுகாதாரத்தினைப் பேணுவதற்கும் போதிய வசதிகள் செய்யமுடியவில்லை எனவும் யாழ். செயலகத்தில் நடை பெற்ற ஆய்வு பட்டறையில் - யாழ். சுகாதார சேவை உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதனாலேயே, சில சுகாதார சீர்கேடுகளைக் கண்டு கொள்ள முடியவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இந்த வெற்றிடங்களைப் பூர்த்திசெய்தால் மட்டுமே, தமது செயற்பாடுகளைச் சிறப்பாகச் செய்யமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ்.பல்கலைக்கழகம்

# ஊழியர் நலன்புரி நடவழக்கைகள் தொடர்பாக வித்தியாசமான நடைமுறைகளை கையாள்கிறது

## ஊழியர் தின விழாவில் குற்றச்சாட்டு

ஊழியர்கள் தொடர்பான நலன்புரி நடவடிக்கைகளில்- யாழ்.பல்கலைக்கழகம் மட்டும், ஏனைய பல்கலைக்கழகங்களை விட, வித்தியாசமான நடைமுறைகளைக் கையாளுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஊழியர்தின விழாவிலேயே - ஊழியர்களால் இக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. ஊழியர்கள் கடன்களைப் பெறுவதாக இருந்தாலும்சரி, வேறு ஏதாவது நலன்களைப் பெறுவதாக இருந்தாலும்சரி, எவருடைய அத்தாட்சிப்படுத்தலுமின்றி, நேரடியாகவே தமது விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.

ஆனால், யாழ்.பல்கலைக்கழகத்தினர் மட்டும்- கிராம சேவையாளர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் உறுதிப்படுத்தல்கள் தேவையெனக் கோரப்படுகிறது. இது நியாயமற்ற செயலாகும். இது தொடர்பாக, உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் ஊழியர்கள் கேட்டுக்கொண்டனர்.

தென்னிலங்கையிலிருந்து வருகை தந்திருந்த அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள்- யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருடன் நேற்றுமுன்தினம் இரவு பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலின்போது, இந்த விடயமும் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும், இதற்கு உரிய தீர்வுகளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படுமென, பல்கலைக்கழக நிர்வாகத்தால் உறுதியளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கட்டிக்காக்கப்படவேண்டிய சிறுவர் உரிமைகள்

தேசமும், தேசப்பற்றும், தேசவிடுதலையும் கட்டிக்காக்கப்படுகின்றது என்றால், அது வளர்ந்துவரும் சமூகத்திற்காகத்தான். வளர்ந்து வரும் சமூகம் என்று பொதுவாகக் குறிப்பிடும்போது, சிறுவர்களையே அந்தப் பதம் சென்று சேரும்.

இன்று - சிறுவர் உரிமைகள் தினம். இந்தத் தினத்திலே - சிறுவர்களை, சிறுவர்களின் உரிமைகளைப் பேணுவது தொடர்பாக அனைவரும் அக்கறை செலுத்துவது அவசியமாகின்றது.

சிறுவர்கள் நாட்டின் முதுகெலும்பு, ஒரு நாட்டைக் கட்டிக்காப்பதற்குப் பொருளாதாரத்தின்மேல் எவ்வளவு அக்கறைகொண்டு, அதனை மேம்படுத்த உழைத்துப் பாடுபடுகின்றோமோ, அவ்வாறேதான் சிறுவர்களையும், சிறுவர் உரிமைகளையும் மேம்படுத்தும் வகையில் அனைவரும் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

இன்று சிறுவர் துஷ்பிரயோகங்களும், சிறுவர் உரிமை மீறல்களும், சிறுவர்கள் காணாமற்போதலும், சிறுவர்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதும் தொடர்கதையாகவேயுள்ளது. நாட்டில் சமாதானச் சூழ்நிலை உருவாகி, ஒரு வருடத்தையும் தாண்டிய இன்றைய சூழ்நிலையில் - சிறுவர்களின் மனவுணர்வுகளையும், அவர்களின் உரிமைகளையும் புரிந்துகொள்ளும் சூழ்நிலை உருவாகுவதற்கு நீண்டகாலமான தாமதமே காணப்படுகிறது.

அண்மைக்காலங்களில் கூடுதலாகச் சிறுவர்கள் காணாமற்போதல் அதிகரித்த வண்ணமேயுள்ளன. இவ்வாறு காணமற்போகும் சிறுவர்களுக்கு என்ன நடக்கிறது. இவர்களை எங்கு கொண்டுசென்று, என்ன செய்கிறார்கள் என்பவையெல்லாம் மர்மமாகவே உள்ளன.

கடத்தப்படும் சிறுவர்கள் - உடல் உறுப்புகளை விற்பனை செய்பவர்களிடம் விற்கப்படுவதும், அவர்கள் சிறுவர்களைக் கொலை செய்வதும், பாலியல்ரீதியான தொழிலுக்குப் பயன்படுத்துவதும், அடிமை வேலைகளைச் செய்வதற்குப் பயன்படுத்துவதுமாக- சிறுவர்களின் சட்டரீதியான உரிமைகள் அனைத்தும் மீறப்பட்டுக்கொண்டேயிருக்கின்றது.

கல்வியும், முன்னேற்றமும் என்ற இரண்டு தண்டவாளங்களில் ஓடுபவர்கள்தான், சிறுவர்கள். அவர்கள் சிறுவர்கள் என்பதனால்,



அவர்களை எந்த விதத்திலும் பயன்படுத்தலாம் என்பது கருத்தல்ல.

சட்டத்தையும், சட்டத்திலே தமக்கெனக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளையும், அதற்கான பிரதிபலன்களையும் அறிவதற்குச் சிறுவர்கள் அறிவு ரீதியான முதிர்ச்சியடைந்தவர்கள் அல்லர் என்பதனால்தான். சிறுவர்கள் எப்போதுமே தங்கிவாழ்பவர்கள் என்ற பட்டியலில் அடக்கப்படுகின்றனர். இந்தத் "தங்கி வாழ்பவர்கள்" என்ற பதம் அனைத்து வகையிலும் தங்கி வாழ்பவர்களையே குறிக்கின்றது. உதாரணமாக - உணவு, உடை, கல்வி, பாதுகாப்பு, சட்டரீதியான உரிமைகள் அனைத்திலும் சிறுவர்கள்-மற்றோரில் தங்கிவாழ்கின்றார்கள் என்பது வெளிப்படை.

இந்தச் சிறுவர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதென்பதும், அவர்களைப் பாதுகாப்பதென்பதும், சிறுவர்களின் கையிலில்லை. முழுவதும் பெரியவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. சிறுவர்கள் - தமக்குச் செய்யப்படும் கொடுமைகளையோ, அநீதிகளையோ உரிய இடங்களில் முறைப்படி எடுத்துச் சொல்லக்கூடிய பக்குவம் இருப்பதில்லை. அவர்களுக்கு அந்தப் பக்குவத்தை ஏற்படுத்துவதும், வழிமுறைகளை எடுத்துச் சொல்வதும்- அவர்களின் பெற்றோரையும், பெரியோர் சமூகத்தையுமே சார்ந்ததாகும். உலக நாடுகள் அனைத்திலும், சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள் - சிறுவர் தொடர்பான உரிமைகளையும்,



சட்டத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பினையும், சிறுவர்கள் தொடர்பான விழிப்புணர்வையும், அவர்களின் கல்வி, பாதுகாப்பு, சமூகத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் முன்னுரிமை என்பவை பற்றியும், எடுத்துக்கூறி, சிறுவர்களை பாதுகாக்கும் பணியில் முக்கிய கவனஞ்செலுத்தி வருகின்றது.

இவர்களையும், இவர்களின் சட்டங்களையும், அவர்கள் கூறும் கருத்துக்களையும் மீறி, சிறுவர்களைச் சீரழிப்பதற்கென்றே சில விரோதிகள் குழுக்களாகவும் தனித்தனியாகவும் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றனர். ஆங்காங்கே தமக்கென ஒரு குழுவை அமைத்து, சிறுவர்களைப் பிடித்து துஷ்பிரயோகம் செய்வதும், வெளிநாடுகளில் உள்ளவர்களின் வேலைகளுக்கு அமர்த்துவதற்காக அனுப்பிவைக்கப்படுவதும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

இதனால், சிறுவர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் எதிர்காலம், கல்வி சகலதுமே பாதிக்கப்பட்டு, உடல் உள ரீதியாகச் சிதைக்கப்பட்டு, எதிர்காலமே பாதிக்கப்படும் ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுவதோடு, மரணங்கள் சம்பவிக்கும் நிலைக்கும் ஆளாகின்றனர்.

எனவே, இந்தநிலை மாறவேண்டும். சிறுவர்கள் உரிமை தினம், சிறுவர் தினம் எனக் கடைப்பிடிப்பதிலும் பார்க்க - சிறுவர் உரிமைகளையும், சிறுவர்களின் பாதுகாப்பையும், சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்தையும், அவர்களை துஷ்பிரயோகம் செய்யும் சக்திகளை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதிலும், சிறுவர்களின் உடல், உள நலனில் அக்கறை கொள்பவர்களாகவும் நாம் மாற்றமடைய வேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய இளைஞர்களாகி, சமூகத்தையும் நாட்டையும் கட்டிக்காக்கும் தலைவர்களாக மாற்றமடையப் போகின்றவர்கள். ஒரு நாட்டின் எதிர்காலமும், அபிவிருத்தியும், முன்னேற்றகரமான அனைத்து முயற்சிகளும், இன்றைய சிறுவர்களின் கைகளிலேதான் தங்கியிருக்கின்றன.

எனவே, சிறுவர்கள்ளையும், சிறுவர்களின் உரிமைகளையும் அவர்களின் பாதுகாப்பினையும் கட்டிக்காப்பதும், அவர்களின் பாதுகாப்பிலும், கல்வியிலும் அக்கறையெடுப்பதும் பெரியவர்களின் கடமைகளைக் கொண்டு சிறுவர் உரிமை தினமான இன்று சிறுவர் பற்றியதான அனைத்துச் செயற்பாடுகளிலும் நல்லெண்ணத்துடன் செயற்படுவோமாக. □

இரா.காயத்திரி

# தெற்காசியாவின் செல்லப்பிள்ளையான பாகிஸ்தானை அமெரிக்கா நம்புகிறதா?



(நேற்றைய தொடர்ச்சி...)

சவுதியைப் பொறுத்தவரை - அவர்கள் நாட்டுக்குள் வைத்து அணு ஆயுதங்களை தயாரிப்பதோ, பரிசோதிப்பதோ இயலாத காரியம். ஆனால், கைநிறையக் காசு இருக்கின்றதே... வெளியில் விற்கத் தயாராக இருந்தால், வாங்கி வைத்துக்கொண்டிருக்க இடமும் இருக்கிறது. சவுதி அரேபியாவை ஆள்பவர்களில் பலர், முஸ்லிம் மதத்தின் 'சுனி' வகையைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு, முஸ்லிம் மதத்தின் மற்றொரு வகுப்பினரான 'ஷியா' முஸ்லிம்களைப் பெரிதாகப் பிடிப்பதில்லை. 'ஷியா' வகுப்பு முஸ்லிம்களால் ஆளப்படும் சவுதி அரேபியாவிற்கு அருகில் உள்ள நாடு ஈரான்.

அந்த ஈரானிடம் அணு ஆயுதங்கள் சமீப காலத்தில் போய்ச் சேர்ந்துவிட்டன. இதனால் சவுதி அரேபியாவும் அணு ஆயுதங்களின் பக்கம் கவனத்தைச் செலுத்தும் என்பது எதிர்பார்க்கப்படக்கூடிய ஒன்று. அதேபோல, பாகிஸ்தான் இப்போது - அவர்களது நேரடி எதிரிநாடான இந்தியாவின் சமீபகால இஸ்ரேலிய நெருக்கத்தை அதீத கவனத்துடன் கண்காணித்துக் கொண்டு இருக்கிறது. இந்தியாவிடமும் பாகிஸ்தானிடமும் கிட்டத்தட்ட ஒரே அளவிலான அணுகுண்டுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் இஸ்ரேல் இவர்கள் எல்லோரையும்விட மகாராஜா. இந்தியா பாகிஸ்தான், ஈரான் எல்லாவற்றிலும் இருக்கும் அணு ஆயுதங்களைக்கூட்டினால் கூட இஸ்ரேலிடம் இருப்பது அதிக எண்ணிக்கையாகும்.

இப்படிப்பட்ட இஸ்ரேல் இந்தியாவுடன் நெருங்கி வருவதை, பாகிஸ்தான் சந்தேகத்துடன் பார்ப்பது மாத்திரமல்ல, இஸ்ரேலுக்கு அருகிலுள்ள இஸ்ரேலின் எதிரியும் தனது நண்பனுமான சவுதி அரேபியாவிற்கு, ஓரிரு அணு ஆயுதங்களைக் கொடுத்து வைத்திருப்பதும் கூட, பிற்காலத்தில் தனக்கு நன்மை என்று நினைக்கலாம். அத்துடன் காசு விடயத்தில் பாகிஸ்தானை தாராளமாகக் கவனித்துக் கொள்ளும் சவுதி அரேபியா விளையாட்டில் காய்கள் இப்படியான இடத்தில் இருப்பதிலிருந்து ஒரு முடிவுக்கு வரலாம். அந்த முடிவு பாகிஸ்தான் அணு ஆயுதங்களை விற்கவும் தயாராக இருக்கும். சவுதி அரேபியா அதனை வாங்கவும் தயாராக இருக்கும் - இடையே அமெரிக்கா இடைஞ்சல் பண்ணாது விட்டால். இந்த சமயத்தில்தான் பாகிஸ்தான் தனது ஏவுகணைப் பரிசோதனையையும் சேர்த்து நடத்தியிருக்கிறது. அதை வெற்றிகரமான பரிசோதனை என்று வெளிப்படையாக அறிவித்தும் இருக்கிறது. இதைத்தான் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது என்பது. ஒரு பக்கமாக இந்தப் பரபரப்பில் சவுதியுடன் செய்யப்பட்ட ஒப்பந்த விடயம் அமுங்கிப்போய்விடும். மறுபக்கத்தில் இந்தியாவுக்கு சின்னதாக ஒரு எச்சரிக்கையும் கொடுத்ததாக இருக்கும்.

அமெரிக்கா - பாகிஸ்தான் செய்வதை நேரடியாக தட்டிக்கேட்க முடியாத நிலையில் இருப்பதை, பாகிஸ்தான் நன்றாகவே புரிந்துவைத்திருக்கின்றது. ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் கொஞ்சம் அகலக்கால் வைத்திருக்கும் அமெரிக்காவுக்கு, இந்தியாவைவிட பாகிஸ்தானின் தயவுதான் இப்போது அவசியம் தேவையென்பதை முஷாரப் நன்றாகவே புரிந்து வைத்துக்கொண்டுதான் அரசியல் செய்கிறார். அமெரிக்கா மீதான செப்ரெம்பர் 11 ஆம் திகதிய தாக்குதலுக்கும், அதைத் திட்டமிட்டதாகக் கூறப்படும் பின்லேடனுக்கும் - ஈராக்குடன் இருந்த நெருக்கத்தைவிட, பாகிஸ்தானுடன் இருந்த நெருக்கம் அதிகம் என்பது சி.ஐ.ஏக்கு நூற்றுக்குநூறு சதவீதம் தெரியும். அல் - கொய்டாவின் பெருந்தலைவர்கள் சந்திப்பது, திட்டமிடுவது, ஆயுதம் சேகரிப்பது, பயிற்சி கொடுப்பது எல்லாமே பாகிஸ்தானின் எல்லைகளுக்குள் நடந்துள்ளன. ஏன், இப்போதுகூட இலைமறைகாயாக பாகிஸ்தானுக்குள் நடக்கின்றன என்றும் கூறப்படுகிறது. அப்படியிருந்தும், ஜோர்ஜ் புஷ் ஏன் பாகிஸ்தான் விடயத்தில் - பொறுத்தது போதும் பொங்கியெழு என்று கிளம்பவில்லை. காரணம் அரசியல் மாத்திரம் அல்ல, சில பொருளாதாரக் காரணிகளும் இருக்கின்றன.

அரசியல் காரணம் - ஆப்கானில் உள்ள அமெரிக்க பொம்மைத் தலைவர் ஹமீட் ஹர்சாயை ஏற்றுக்கொண்டு, அவருடன் ஒப்பந்தம் செய்ய பாகிஸ்தான் சம்மதித்திருப்பது. பொருளாதாரக் காரணம் - ஒரு மல்ரி மில்லியன் டொலர் புறொஜெக்ற் - எண்ணெய் கொண்டு செல்லும் இராட்சத பைப் லைன் இப்போது அமைக்கப்படும்போது, அது ஆப்கானிஸ்தானில் இருந்து செல்வது பாகிஸ்தானில் சில பகுதிகளின்ஊடாக. ஆப்கானிஸ்தானில் வைத்து அமெரிக்க நிறுவனங்களால் செய்யப்படும் இந்த பைப் லைன் அமைக்கும் வேலை, பின்லேடனைத் தேடும் வேலையை விட புறொஜெக்ற் பூர்த்தியடைந்து பைப் லைனிலிருந்து எண்ணெயும், பணமும் கொட்ட வேண்டுமென்றால், அமெரிக்காவுக்குத் தேவை பாகிஸ்தானின் தயவு.

இப்படியான ஒரு அருமையான சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்குமா என்ன? பாகிஸ்தானுக்கு கிடைத்திருக்கிறது. பரமசிவன் கழுத்துப்பாம்பு போல, அதை அட்டகாசமாகப் பயன்படுத்துகின்றது பாகிஸ்தான். ஒரு பக்கமாக சவுதியுடன் அணு ஆயுத ஒப்பந்தம். மறுபக்கமாக இந்தியாவை மிரட்ட ஏவுகணைப் பரிசோதனை என்று அடித்து தூள் கிளப்புகின்றது. அமெரிக்கா உள்ளூர முறுகியபடி பேசாமல் பார்த்துக்கொண்டு இருப்பதைத் தவிர, இப்போது எதுவுமே செய்யமுடியாது.

பாகிஸ்தான் தற்போது பரிசோதனை செய்த ஏவுகணை பற்றியும் முரண்பாடான சில காரணங்கள் உண்டு. விஷயம் பாகிஸ்தான் வெளிப்படையாக கூறுவதைப்போல சாதாரண விடயம் அல்ல. அதற்கு பாகிஸ்தான் இவ்வளவு எடுப்பு எடுக்கவேண்டிய அவசியமும் இல்லை. சமாச்சாரம் கொஞ்சம் ஆழமானது. அத்துடன் சீனாவிற்கும் இதில் சம்பந்தம் இருக்கின்றது.

பாகிஸ்தான் பரிசோதனை செய்த ஏவுகணை பற்றி - பத்திரிகைகளில் வெளியாகியுள்ள தகவல்கள் உங்களைக் போட்டுக் குழப்பாமல் இருக்கவேண்டுமென்றால், நீங்கள் ஒரு ஏவுகணை நிபுணராக இருக்கவேண்டும். அல்லது நல்ல ஞாபகசக்தி உடையவராக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் குழப்பியடித்துவிடும்.

சில பத்திரிகைகள் பாகிஸ்தான் பரிசோதித்த ஏவுகணைகள் 'ஸ்கொட்' வகை ஏவுகணை என்று எழுதின. வேறு சில 'சகிம்' ஏவுகணை என்று எழுதின. இன்னும் சில 'இன்சாவிக்' ஏவுகணை என்று எழுதின. இதில் எது நிஜம் அல்லது எல்லாமே நிஜமா...? என்பதை அறிந்துகொள்ள சற்றுப் பின்

**கனடாவிலிருந்து**
**ரிஷி**

னோக்கிப் பார்க்கவேண்டும்.

1982 இல் சீனா - பாகிஸ்தானுடன் ஆயுத ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டது. சீனத் தயாரிப்பான M 11 லோஞ்சர்களையும், மிசைல்களையும் விற்பனை செய்துகொள்வதற்கு ஒப்பந்தம் செய்த சீனா, M 11 ஏவுகணைகளைக் கொடுக்காமல் உதிரிப்பாகங்களாகக் கொடுத்தது. அவற்றைப் பாகிஸ்தான் தாங்களே பொருத்திப் பூர்த்தி செய்வதாக ஏற்பாடு. சீனா தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்கி அசெம்பிளை மேற்பார்வையிட பாகிஸ்தானுக்கு இரண்டு பேரையும் அனுப்பி வைத்தது. பாகிஸ்தானுக்கு கொடுக்கப்பட்ட M 11 ஏவுகணைகள் **500Kg Pay load 300 mm** தூரம் வரை செல்லக்கூடியவை என்றும் சொல்லப்பட்டது. (...தொடரும்)

# பலஸ்தீனப் பிரதமர் அகமட் கூரே போராளிக்குழுக்களுடன் சந்திப்பு!




பலஸ்தீனப் பிரதமர் அகமட் கூரே, இஸ்லாமியப் போராளிக் குழுக்களை எதிர்வரும் புதன்கிழமை இஸ்ரேலுடனான போர் நிறுத்தம் தொடர்பாக, பேச்சுவார்த்தை நடத்துவதற்கென சந்திப் பொன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளார்.

போராளிக் குழுக்களான ஹமாஸ், இஸ்லாமிய இகாட் உட்பட பல்வேறு குழுக்களையும் பிரதமர் கூரேயும், எகிப்தைச் சேர்ந்த நடுவர்கள் சிலரும் சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்கள்.

சென்றவாரம் பலஸ்தீன நாடாளுமன்றம் அமைக்கப்பட்ட பின், இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க பிரதமர் கூரே எடுத்துக்கொண்ட முதலாவது முயற்சி இதுவாகும்.

முதல் நிலையாக பலஸ்தீனப் போராளிக்குழுக்களை, தற்காலிக போர்நிறுத்தம் ஒன்றுக்கு உடன்படவைக்க வேண்டும் என, கூரே தெரிவித்தார். இதனிடையே ஹமாஸின் ஆன்மீகத் தலைவர் சேக் அகமட் ஜாசின் இது தொடர்பாக, கருத்துத் தெரிவித்தபோது-

உடனடியாக இஸ்ரேலுக்கெதிரான தாக்குதல்களை நிறுத்தும் சாத்தியம் இல்லையெனவும், இஸ்ரேலிய அரசுக்கும், பலஸ்தீனியர்களுக்கும் - பாதுகாப்பு, சமாதான வாழ்வில் எதுவித ஈடுபாடும் இல்லையெனவும், தெரிவித்தார்.

இதேநேரத்தில் - செவ்வாய்க்கிழமை பலஸ்தீனியத் துப்பாக்கிதாரர் ஒருவர் - பிரார்த்தனைக்கு உபயோகிக்கும் கம்பளத்துக்குள், துப்பாக்கியொன்றை மறைத்து கடத்திச்சென்று வெஸ்ட் பாங்கில் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இரு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கிலுள்ள பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு ஈரான் முன்வந்துள்ளது!

ஈராக்கில் அதிகரித்து வரும் பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுபபடுத்துவதற்கு ஈரான் முன்வந்துள்ளது.

ஈராக்கினை ஆளும் இடைக்கால அரசின் தலைவர் "தலபாணி" இவ்வாறு பி.பி.சிக்கு தெரிவித்தார். தலபாணி குழு ஒன்றுடன் ஈரானுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஈராக்கில் அதிகரித்து வரும் வன்முறைகளுக்கு அமெரிக்காவின் ஆட்சியை எதிர்ப்பவர்களை விட வேறு வஞ்சிக்கப்பட்ட கொலையாளிகளும் காரணமாகும் என தமக்கு தெரிவிக்கப் பட்டதாக "தலபாணி" தெரிவித்தார்.




ஈராக்கினுள் பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த ஈரான் முன்வந்துள்ளது. இதனிடையே, ஈராக்கினுள் அதிகரித்து வரும் வன்முறைக்கு ஈரானின் பகைஉணர்வே காரணமாகும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈரானின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள தீவிரவாதிகளை உள்ளே செல்லவிடாது கட்டுப்பாடுகளை அதிகரிக்கப்போவதாக தம்மிடம் தெரிவிக்கப்பட்டதாக ஈராக்கிய இடைகால அரசின் வெளிநாட்டமைச்சர் "செபாரி" தெரிவித்தார். ஈராக்கின் கட்டுமானப் பணிகளுக்கு ஈரான் உதவுவதற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

# வியட்னாம் போருக்குப்பின்னர் முதன்முறையாக அமெரிக்க போர்க்கப்பல் அங்குசென்றுள்ளது!

வியட்னாம் போருக்குப் பின், முதன் முறையாக அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்று, கடந்த புதன்கிழமை வியட்னாம் சென்றுள்ளது. யு.எஸ்.எஸ் வண்டகிறிப்பர் என்ற கப்பல் பணியாளர்களுடன் கோமிசின் நகரை சென்றடைந்துள்ளது.




முன்னாள் எதிரிகள் நண்பர்களாகிவிட்டதை இந்நிகழ்வு தெரிவிப்பதாக, வியட்னாமிற்கான அமெரிக்கத்தூதுவர் ரேமொண்ட் போட்காட் தெரிவித்தார்.

இக்கப்பல் வியட்னாம் கடல் எல்லைக்குள் நுழைந்ததும் வியட்னாம ரோந்து படகுகள் வழிநடத்திச் சென்றன. இரு நாடுகளினதும் தொடர்புகள் புதிய வடிவத்தைப் பெற்றுள்ளதாக, தெரிவிக்கப்படுகின்றது.



சென்றவாரம் வியட்நாமின் பாதுகாப்பு அமைச்சர் பாம் வான்ரா, "அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்டுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதற்காகச் சென்றிருந்தார்.

அமெரிக்காவிற்கு வியட்னாம் இராணுவ அதிகாரி விஜயம் செய்தது இதுவே முதல் தடவையாகும்.



அமெரிக்கப் போர்க்கப்பல் வியட்னாமிற்கு விஜயம் செய்தபோது கொமின நகரில் அக்கப்பலை வரவேற்பதற்கு ஏவுகணை பொருத்திய கப்பல் கயிற்றின் மூலம் வழிநடத்திச்செல்வதைப் படத்தில் காணலாம்.

## உலக நோக்கு

# இஸ்ரேல் - ஜோர்தான் எல்லையில் துப்பாக்கிச் சூட்டில் ஐவர் காயம்

இஸ்ரேல் ஜோர்தான் எல்லையில் நடைபெற்ற துப்பாக்கிச் சமரில், நான்கு உல்லாசப்பயணிகளுட்பட ஐவர் படுகாயமடைந்துள்ளதாக இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலில் 'ஏயிலாட்' என்ற கோடைகால வாசஸதலத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஒருவர் இஸ்ரேலியர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை நடத்திய துப்பாக்கிதாரி கொல்லப்பட்டதாகவும், ஜோர்தான் பிரதேசத்திலிருந்து இவர் இஸ்ரேலிய எல்லை நோக்கி வந்ததாகவும் இஸ்ரேலியப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

இஸ்ரேலியரின் கடவுச்சீட்டுக்கள் பரிசோதனை செய்யும் இடத்தை நோக்கி, றக்வண்டிகளின் பின்னாலிருந்து தாக்குதல் மேற்கொண்டதாகவும், இஸ்ரேலிய அதிகாரி மெனாச் செம்செலிசோவிச்சி தெரிவித்தார். காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்தச் செல்லப்பட்டதாகவும், அப்பிரதேசம் பிரயாணம் செய்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனப் பிரதமருக்கும், இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்குமிடையே தற்காலிகப் போர்நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கவிருந்த நேரத்திலேயே, இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.



பெலுகா ஸ்ரேயன் எனப்படும் மீனினத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு நீர்த்தேக்கங்களில் இவை வளர்க்கப்படுகின்றன. சட்டத்திற்குமாறாக இம் மீனைப்பிடிப்பதும், கடலில் எண்ணெய் கலந்திருப்பதாலும் இம்மீன்கள் அழிந்துவருகின்றன.

## ஊர்சுற்றி எழுதுவது

அம்மாவுக்கும், ஐயாவுக்கும் வெகுதூரத்திலிருநத இடைவெள' சுருங்கி இருவரும் கிட்ட கிட்ட வருவதற்கு வழிகாணப்பட்டிருப்பதாக சொல்கிறாங்களே உண்மைதானா? என்று கேட்டார் நண்பர்.

இரண்டாவது தடவையாக ஜனாதிபதியும் பிரதமரும், ஜனாதிபதி மாளிகையில் முந்த நாள் சந்தித்துப் பேசியது பற்றித்தான் நண்பர் கேட்டார்.

முக்கியமான தேசியப் பிரச்சினைகளில் ஜனாதிபதியும் பிரதமரும், கூட்டாகச் செயற்படக் கூடிய எதிர்கால ஒழுங்கு முறைகளை வகுப்பதற்காக அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறதாம்.

இதுதான் இருவரும் சந்தித்து செய்திருக்கும் காரியம்.

முக்கியமான தேசியப் பிரச்சினையென்றால் என்ன? போரினால் பாதிக்கப்பட்ட இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாமலும், தங்கள் சொந்த வீடுகளில் குடியமர முடியாமலும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பற்றி நடவடிக்கை எடுப்பதற்காகத்தானே புலிகள் இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபை அமைக்கவேண்டுமென்று கேட்டனர்.

இது முக்கியமான தேசியப் பிரச்சினை இல்லையா? என்று நண்பர் கேட்டார்.

இடைக்காலத் தன்னாதிக்க அதிகாரசபை திட்டவரைபைக் குழப்புவதற்காகத்தானே ஜனாதிபதி அரசியலமைப்பில் தமக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தைப் பிரயோகித்து அதிரடி நடவடிக்கை எடுத்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் புனர்வாழ்வு பெற்றாலென்ன, புனரமைப்புக்கு வழி தேடினாலென்ன? அவர்கள் தமிழ் மக்கள் என்பதால் அது முக்கிய தேசியப் பிரச்சினையாக இருவருக்குமே தோன்றவில்லையோ?.

அம்மாவுக்கும், ஐயாவுக்கும் இப்பொழுது முக்கிய தேசியப் பிரச்சினையாக இருப்பது யாருக்கு அதிகாரம் இருக்கிறது என்பதுதான்.

மூன்று முக்கிய அமைச்சுக்களை பொறுப்பேற்று அதிரடி நடவடிக்கை எடுத்தார் சந்திரிகா.

அவற்றை திரும்பப் பொறுபபேற்க ரணிலால் முடியவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து ஒதுங்கிக் கொள்ளத்தான் முடிந்தது.

இருவருக்குமிடையில் என்ன தான் போட்டி இருந்தாலும் வரவு செலவுத்திட்டத்தைக் கொண்டுவருவதற்கு எவரும் தடையாக இருக்கவில்லை!.

ஆனால், சமாதானப் பேச்சைத் தொடங்காமல் டோக்கியோ மாநாட்டில் உறுதி அளிக்கப்பட்ட கோடி கோடியான பணம் வந்து சேராதே?

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வேயின் சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் இப்பொழுது புதுடில்லிக்குப் போய் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்துகிறார்.

கொழும்பில் ஏற்பட்ட அதிகாரப் போட்டியும், அதிரடி நடவடிக்கைகளும் சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட தடைகளும், நோர்வே இந்த சமாதான முயற்சிகளில் இருந்து ஒதுங்க முன்வந்ததற்கும், பிரதமர் ரணில் தான் ஒதுங்கிக் கொண்டு சந்திரிகாவை சமாதான முயற்சிகளைத் தொடரும்படி கேட்டுக்கொண்டிருப்பதும்,

இவையெல்லாவற்றுக்கும் சூத்திரம் டில்லியில் தான் இருககிறதென்பதால்தான் சொல் ஹெய்ம் அங்கு போயிருக்கிறாரோ என்கிறார் எதிர் வீட்டுக்காரர்.

தன்னாதிக்க அதிகாரசபை தமிழீழத்தை அடைவதற்கான திட்டம் என்று இந்திய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தமிழீழம் உருவானால் தான் தமிழ் நாட்டில் பழையபடி தி.மு.க போன்றவை பிரிவினை கேட்டுக் கிளர்ச்சி செய்யத் தொடங்கலாம் என்று இந்திய அரசு அஞ்சுகிறதாம்.

ரஜனிக்கு கால் சுழுக்கினால், சிம்ரனுக்கு தும்மல் வந்தால் தமிழ்நாடு துள்ளி எழுந்தாலும் எழுமே தவிர, தமிழ் உணர்ச்சி என்ன விலை என்று கேட்பார்கள்.

வைகோவும், நெடுமாறனும் வருடக்கணக்கில் சிறை வைக்கப்பட்டும் சீறி எழாத தமிழகம், தமிழீழம் கிடைத்ததும் பிரிவினை கேட்டுவிடுமாக்கும் என்றார் நண்பர். உண்மைதானே!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜே.வி.பியுடன் கூட்டணி; சுதந்திரக்கட்சி அனுமதி!

(கொழும்பு)

ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சுதந்திரக் கட்சி அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை, அந்தக் கட்சியைச் சேர்ந்த சிலர் கூட்டணிக்கு தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை ஜே.வி.பியுடன் பேச்சு நடத்திய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு, இந்தக் கூட்டு உடன்படிக்கைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஜே.வி.பியுடன் கூட்டுத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் சிலர், எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தலின் மூலம் ஐக்கிய தேசிய முன்னணி அரசைத் தோற்கடித்து ஆட்சியை அமைக்க இது வழிவகுக்கும் எனத் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டுத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, கட்சிலிருந்து இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதலாவது குழு கட்சியின் கொள்கைகள் தொடர்பாகப் படிக்கும் அதேவேளை, மற்றைய குழு இந்தக் கூட்டுத் தொடர்பாகக் கட்சிக்குள் இருக்கும் முரண்பாடுகள் குறித்து ஆராயும்.

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதிக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் கூட்டணியின் தலைமைப் பதவி தொடர்பாக ஏற்பட்ட சிக்கலால் அந்தப் பேச்சு வார்த்தை குழம்பியதாக, இந்தக் கூட்டுத் தொடர்பாக எதிர்க்கும் கட்சியிலுள்ள சிலர் தெரிவித்தனர்.

எது எப்படியிருந்தாலும் ஐக்கிய தேசிய முன்னணி அரசை எதிர்ப்பதற்கு ஜே.வி.பியுடனான கூட்டே சிறந்ததென கடந்த திங்கள், ஜே.வி.பியுடன் சந்திப்பு நடத்திய சுதந்திரக் கட்சியினர் திட்டமிட்டிருந்தனர்.

ஜே.வி.பியுடனான கூட்டு நிதர்சனமாகிவரும இவ்வேளையில், சுதந்திரக் கட்சியில் சிலர், தமது சொந்த நலன்களுக்காக இதனை எதிர்க்கின்றனர். அவ்வாறு எதிர்ப்பவர்களில் எதிர்க்கட்சித் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவும் ஒருவர்.

இவ்வாறு ராஜபக்ஷ எதிர்ப்பதற்குக் காரணம், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் இவர் என்பதாலாகும். எனவே ஜே.வி. பியுடனான கூட்டணியானது ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சுதந்திரக்கட்சியுடனான ஜே.வி.பி கூட்டணி தாமதமடைவது வெளிநாட்டவருக்கு இலாபம்

### விமல் விரவன்ச கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையிலான தேசிய கூட்டணி ஒன்றை நிறுவுவதற்கு காலதாமதம் ஏற்படுவது, வெளிநாட்டவர்களால் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர்.விமல் வீரவன்ச தெரிவித்தார்

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ச தற்போதைய நிலைமை நாட்டில் பிளவை ஏற்படுத்தக் கூடிய - மிகவும் ஆபத்தானது ஆகும்.

கூட்டணி குறித்த இருதரப்பு பேச்சுக்களும் நிறைவுபெற்றிருக் கின்றன. இருகட்சிகளுக்கும் இடையிலான பிரச்சனைகளைத் தீர்ப்பதே இதில் முக்கியமானது என அவர் மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்றை ஒத்திவைப்பதற்கு...

நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தமை அரசியல் அமைப்புக்கு முரணானது.

இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்க காங்கிரஸ் சபைகளும் இவ்வாறான ஒரு நடைமுறையையே பின்பற்றி வருகின்றன.

அரசியல் அமைப்பின் நான்காவது சரத்தின்படி, நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், கூட்டத்தொடரை கூட்டுவதற்கும் அதிகாரம் சபாநாயகருக்கே உண்டு.

நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைத்தமை நீண்ட காலமாக நாட்டில் இடம்பெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளைத் தடைப்படுத்தியுள்ளது.

அத்துடன் நாடாளுமன்றத்தின் கௌரவத்திற்கும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளது எனவும் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா மேலும் தெரிவித்தார். (01)

## மாவீரர் நாள் அலங்கரிப்புக்கு...

இன்று இது குறித்து கண்காணிப்புக் குழுவினருடனும் விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடி இந்த விடயம் குறித்து ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவோம் என அப்பகுதிக்குச் சென்ற படை அதிகாரி தெரிவித்தார்.

அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தடன் பத்து நிமிடங்களுக்குள் இதற்கான அனுமதி வழங்க வேண்டும் என பொதுமக்கள் கோரினர்.

இந்தச் சம்பவம் நடைபெற்றதை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்மாறனுடன் 522 ஆவது பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் பெரேரா,மேஜர் தயானந்தா மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர், இந்த எழுச்சி நிகழ்வுக்கான அலங்கார வேலைகள் தொடர்பாக இன்று கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் சந்தித்து கலந்துரையாடுவது என்றும் முடிவு செய்யப்பட்டதை அடுத்து அலங்கார வேலைகளை நிறுத்தி அந்தப்பகுதியிலிருந்து மக்கள் விலகிச் சென்றனர். (29)

## சமாதான...

கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது.

நாம் இந்தியாவுக்கு ஒவ்வொரு விடயத்தையும் தெரியப்படுத்தி வருகிறோம். அமெரிக்காவுக்கும் சிலவற்றைத் தெரியப்படுத்தி வருகிறோம்.

எமது சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் எரிக் சொல்ஹெய்ம் மேலும் குறிப்பிட்டார்.

## சபாநாயகர்...

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை - சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள தமது அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

## மிலிந்த இன்று ஜப்பான்...

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகள் குறித்து, ஜப்பானிய அரசாங்கம் ஆழமான பார்வையினைச் செலுத்திவருகிறது.

இலங்கையின் சமாதானப் பேச்சில் முக்கிய பங்கு வகித்துவரும், நாடு என்றவகையிலும், இலங்கையில் சமாதானம் ஏற்பட்டால் 4.5 பில்லியன் டொலரை வழங்கத்தயார் என வெளிநாடுகள் உறுதியளித்த-சர்வதேச உதவி வழங்கும் மாநாட்டை நடத்திய நாடு என்ற வகையிலும் ஜப்பான் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஜப்பானுக்கு விஜயம் செய்யும் அமைச்சர் மிலிந்த மொறகொட - அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜெரிக்கோ கவாக்குச்சியையும், விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி மற்றும் பலரையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## மாவீரர் நாளை...

மாவீரர்களின் தியாகமும் வரலாற்றைச் சுட்டி நிற்கின்றது. காலத்தால் அழியாத மாவீரர் தியாகம் உலகிற்கு புதிய அத்தியாயத்தைப் படைத்துள்ளது. தமிழ் இனத்திற்கு புது உத்வேகத்தைக் கொடுத்துள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேச்சிலிருந்து நோர்வே...

சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் முக்கிய தொடர்புள்ளது. இது ஒரு முக்கிய கருத்தாகும். எனத் தெரிவித்தார்.

செய்தியாளர் சிபாலிடம், தற்போதைய இலங்கையின் நிலமைகள் தொடர்பாக என்ன பேசினீர்கள், தற்போது நோர்வே என்ன செய்துகொண்டிருக்கிறது எனக்கேட்ட போது,

விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம், கடந்தவாரம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் மற்றும் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடனும் தாம் நடாத்திய பேச்சுக்கள் தொடர்பாக சுருக்கமாகத் தெரிவித்தார்.

அத்துடன் இவர்கள் மூவரும் சமாதான முயற்சியை தொடர வேண்டுமென்பதிலும் ஈடுபாடுடையவர்களாக உள்ளனர் எனவும் தெரிவித்தார். தற்போது நோர்வே அரசு இலங்கையில் நடக்கும் நிகழ்வுகளை பார்த்துக் கொண்டு மட்டும் இருக்கிறது, என சிபால் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி, சந்திரிகாவிற்கும், பிரதமர் ரணிலுக்கும் நாம் கூறும் ஆலோசனை, இரு பகுதிகளிலுமுள்ள வேறுபாடுகளைக் களைந்து தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுங்கள் என்பதாகும் எனத் தெரிவித்தார் கன்வல் சிபால்.

## அரச ஊழியர், ஓய்வூதியர்களுக்கு...

அரச ஊழியர்கள் 10 வீத சம்பள உயர்வையோ அல்லது 1250 ரூபா சம்பள உயர்வையோ பெறமுடியும். அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ள இந்தச் சம்பள உயர்வு பொலிஸ் திணைக்களம், ஆயுதப்படை மற்றும் கூட்டுத்தாபன ஊழியர் உள்ளிட்ட அனைவருக்கும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், கடந்த 2000 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ஆயிரத்து 200 ரூபா இடைக்காலப் படியும் 2001 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ஆயிரம் ரூபா அல்லது சம்பளத்தில் 10 வீத சம்பள அதிகரிப்பையும் 2006 ஆம் ஆண்டிலிருநது அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கப்படவுள்ளது.

முன்னர் தெரிவிக்கப்பட்ட திஸ்ஸ தேவேந்திர சம்பள அதிகரிப்புத் திட்டமும் கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது.

ஓய்வூதியக்காரர்களின் கொடுப்பனவுகள் 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 10 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது. அதேவேளை, மூத்த சேவையாளர்களைக் கௌரவப்படுத்தும் வங்கி வைப்புகளுக்கான வட்டி அதிகரிப்பும் வழங்கப்படவுள்ளன.

அரச ஊழியர்களுக்கான வீடமைப்புக் கடன்திட்டம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன்படி வீடு அமைக்கவோ, வீட்டைப் புனரமைக்கவோ, காணி கொள்வனவு செய்யும் பொருட்டோ அரச ஊழியர் ஒருவர் 10 லட்சம் ரூபாவரை கடன் பெறமுடியும். அதனை 20 வருடங்களில் 9.5 வீத வட்டிவீத அடிப்படையில் திருப்பிச் செலுத்தமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சுயவிருப்பு ஓய்வூதிய முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் அரச ஊழியர்கள் எவரும் சுயவிருப்பின்படி ஓய்வுபெற முடியும். அவர்களுக்கு 2000 ஆம் ஆண்டுக்குரிய இடைக்காலக் கொடுப்பனவு மற்றும் 2001 ஆம் ஆண்டுக்கான சம்பள உயர்வு உள்ளிட்ட சம்பளத்தை அவர் ஓய்வூதியமாகப் பெறமுடியும். அவ்வாறு சுயவிருப்பு ஓய்வூதியம் பெறும் ஒருவர் இந்தக் கொடுப்பனவினை 55 வயதுவரை பெறுவர். அதன்பின்னர் அவருக்குரிய சம்பள அடிப்படையிலான ஓய்வூதியம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

உரங்களுக்கான மானியமும் ஜனவரி முதல் அதிகரிக்கப்படவுள்ளதாகவும், புதிய வரவு - செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில பொருட்களின் கலால் தீர்வையும் சீராக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 'பியர்' மீதான கலால் தீர்வை 5 சதவீதத்திற்கு குறைவான மதுசாரச் செறிவினை கொண்டிருந்தால் 5 ரூபாவாலும், 5 சதவீதத்திற்கு மேல் மதுசாரச் செறிவு கொண்டிருந்தால் 10 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தூயதாக்கப்பட்ட மதுசாரம் மீதான கலால் தீர்வை லீட்டர் ஒன்றுக்கு 36 ரூபா முதல் 200 ரூபா வரையில் உயர்த்தப்பட்டிருக்கிறது.

### நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்படி

அடுத்த ஆண்டுக்கான மொத்த தேசிய வருமானம் 33 ஆயிரத்து 200 கோடி ரூபா.

| | |
|---|---|
| மொத்த செலவு | 46 ஆயிரத்து 900 [illegible] |
| பாதுகாப்பு செலவீனம் | 5 ஆயிரத்து 802 கோடி 22 லட்சம் ரூபா. |
| துண்டுவிழும் தொகை | 13 ஆயிரத்து 700 கோடி ரூபா. |

(இது மொத்த தேசிய உற்பத்தியில் 8.6 வீதம்) (01)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கொல்லங் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி- சிவசுப்பிரமணியம் (முன்னாள் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை பணியாளர், தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில் (முன்னாள் பணியாளர்) அவர்கள் 19.11.2003 அன்று சிவபதமடைந்துவிட்டார். அன்னார் சின்னத்தம்பி (இளையகுட்டி) மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் மகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், மகேஸ்வரியின் சகோதரனும், காசிநாதர், ஆனந்தசிங்கம், ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இறுதிக்கிரிகைகள் 20.11.2003 இன்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மதியம் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கட்டுப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தற்காலிக முகவரி:-
துர்க்காபுரம்,
தெல்லிப்பளை

தகவல்
நகுலேஸ்வரி (இராசு)
மனைவி.

(சி-1817)

## மரண அறிவித்தல்



### முருகேசு சரஸ்வதி

(காரைநகர்)

காரைநகர் சந்தம்புளியடியைச் சேர்ந்த முருகேசு சரஸ்வதி 19.11.2003 (நேற்று) புதன்கிழமை அதிகாலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற முருகேசின் அன்பு மனைவியும், பாலசிங்கம், பரமேஸ்வரி, நாகேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானாம்பிகை, காலஞ்சென்ற முத்துக்குமாரு, தருமர், கணேசன் ஆகியோரின்மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வியாழக்கிழமை இன்று காலை 10.00 மணியளவில் சங்கரத்தை குளத்தடியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குளத்தடி, நவாலி றோட்,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

தகவல்
பா.மகேந்திரம் (பேரன்)

(சி-1814)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.